# தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

## ஆறாம் அத்தியாயம்.

### ஆரம்பப் போராட்டம்.

(தொடர்ச்சி.)

இவ்வாறு 1893-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமைச் சொந்த அநுபவத்தினலேயே நன்கு அறிந்துகொண்டேன். ஆனால் பிரிட்டோரியாவில் இவ்விஷயமாக இந்தியர்களுடன் சிற்சில சமயம் பேசியதேயன்றி வேறெதுவும் செய்யவில்லை. கம்பெனியின் வழக்கையும் பார்த்துக்கொண்டு தென்னாப்பிரிக்கா இந்தியர் குறைகளைப்பற்றியும் முயற்சியெடுத்துக்கொள்வது ஒரே சமயத்தில் இயலாத காரியங்கள் என்று தோன்றிற்று. இரண்டையும் செய்ய முயலுதல் இரண்டுக்கும் அழிவு தேடுவதாகும் என நான் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்தது. இவ்வாறாக 1894-ம் ஆண்டு பிறந்தது. நான் டர்பனுக்குத் திரும்பி அங்கிருந்து இந்தியாவுக்குப் புறப்பட ஆயத்தஞ் செய்யலானேன். தாதா அப்துல்லா நடத்திய பிரிவுபசார விருந்தின்போது யாரோ ஒருவர் "நேட்டால் மெர்க்கரி" என்னும் பத்திரிகையின் பிரதி ஒன்றை என்னிடம் கொடுத்தார். அதைப் படித்தபோது, நேட்டால் சட்டசபை நடவடிக்கைகளினிடையே "இந்தியர் வாக்குரிமை" என்னும் தலைப்பின்கீழ் சில வரிகள் இருப்பதைக் கண்டேன். ஸ்தல அரசாங்கத்தார் இந்தியர் வாக்குரிமையைப் பறிக்கும் நோக்கங்கொண்ட ஒரு மசோதா கொண்டுவர இருந்தனர். இந்தியர்கள் இப்போது பெற்றிருந்த சிற்சில உரிமைகளும் அடியோடு போவதற்கு அம்மசோதா ஆரம்பமாகுமேயல்லாது வேறில்லை. அப்போது பேசப்பட்ட பேச்சுக்கள் அரசாங்கத்தின் நோக்கம் அதுவென்பதைத் தெள்ளிதின் உணர்த்தின. அங்கிருந்த வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அந்த விவரத்தைப் படித்துக் காட்டி என்னாலியன்றவரை நிலைமையை விளக்கிச்சொன்னேன். ஆனால் விஷயங்கள் எல்லாம் எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. இந்தியர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கான அம்முயற்சியைப் பலமாக எதிர்த்து நிற்கவேண்டுமென்று நான் யோசனை சொன்னேன். அவர்கள் அதற்கும் சம்மதித்தார்கள். ஆனால் தாங்களாகவே அப்போரை நடத்தும் சக்தி தங்களுக்கு இல்லையென்று சொல்லி என்னை அங்கேயே தங்கும்படி வற்புறுத்தினார்கள். போராட்டம் முடியும் வரையில் ஒரு மாதமோ அதற்கு மேலோ தங்குவதற்கு ஒப்புக்கொண்டேன். அன்றிரவே சட்டசபையில் சமர்ப்பிக்க ஒரு விண்ணப்பம் தயாரித்தேன்.

நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டு அரசாங்கத்துக்கு ஒரு தந்தி அனுப்பப்பட்டது. சேத்ஹாஜி ஆதம் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி உடனே நியமிக்கப்பட்டு, அவர் பெயரால் தந்தி அனுப்பப்பட்டது. இதன் பயனாக மசோதாவின் மேல் விவாதம் இரண்டு நாளைக்குத் தள்ளி வைக்கப்பட்டது. இந்தியர்கள் தென்னாப்பிரிக்கா சட்டசபையொன்றுக்கு அனுப்பிய முதலாவது விண்ணப்பம் அதுவே யாகும். மசோதாவுக்கு விரோதமான அபிப்பிராயத்தை அது சிறிதளவு உண்டாக்கியதாயினும் மசோதா நிறைவேறுமற் செய்ய அதனால் முடியவில்லை. மசோதாவின் பிந்தைய சரித்திரத்தை நாலாம் அத்தியாயத்திலேயே சொல்லியிருக்கிறேன். இத்தகைய கிளர்ச்சியில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் அநுபவம் இதுவே முதலாவதாகும். இதனால் சமுகத்தினிடையே ஒரு புதிய எழுச்சி உண்டாயிற்று. தினந்தோறும் கூட்டங்கள் நடந்தன. நாளுக்கு நாள் அதிக ஜனங்கள் கூட்டங்களுக்கு வந்தார்கள். நிதி தேவைக்கு மேலேயே வசூலாயிற்று. விண்ணப்பங்களின் பிரதிகள் எடுத்தல், கையொப்பம் வாங்குதல் முதலிய வேலைகளில் ஊதியம் எதுவுமின்றித் தொண்டர்கள் பலர் உதவி புரிந்தார்கள். வேலை செய்ததோடன்றிப் பணமுங் கொடுத்தவர்கள் அநேகர். ஒப்பந்த இந்தியர்களின் புதல்வர்கள் இவ்வியக்கத்தில் ஊக்கத்துடன் சேர்ந்தனர். அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்ததோடு அழகான கையெழுத்தும் இருந்தது. இரவும் பகலும் அவர்கள் பிரதி எடுத்தல் முதலிய வேலைகளை ஊதியமின்றிச் செய்தனர். ஒரு மாதத்திற்குள் பத்தாயிரம் கையொப்பங்களுடன் ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டு லார்டு ரிப்பனுக்கு அனுப்பப்பட்டது. நான் அப்போதைக்கு ஏற்றுக்கொண்ட வேலை முடிவடைந்தது.

தாய்நாடு திரும்ப விடை கேட்டேன். ஆனால் இக்கிளர்ச்சியானது, இந்தியர்களிடையே பெரும் ஊக்கத்தை எழுப்பியிருந்தபடியால் அவர்கள் நான் போகக்கூடாதென்று தடைசெய்தார்கள். "எங்களை அடியோடு அழித்துவிடும் நோக்கங்கொண்ட முயற்சிக்கு இதுதான் ஆரம்பம் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். குடியேற்ற நாட்டுமந்திரி நமது மகஜருக்கு அநுகூலமான பதில் விடுப்பார் என்பது என்ன நிச்சயம்? எங்களுடைய உற்சாகத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். விருப்பத்துடன் வேலைசெய்ய நாங்கள் சித்தமாயிருக்கிறோம். நமக்கு நிதியும் இருக்கிறது. ஆனால் வழிகாட்டுபவர் ஒருவர் இல்லாவிடில் சிறிதளவு செய்த வேலையும் பயனின்றிப் போய்விடும். ஆதலின் இங்கே நீங்கள் தங்குவது உங்கள் கடமையென்று கருதுகிறோம்" என்று அவர்கள் கூறினர். இந்தியர் நலங்களைக் காவல் செய்ய நிரந்தரமான ஸ்தாபனம் ஒன்றிருப்பின் நலமென்று நானும் எண்ணலானேன். ஆனால் நான் எங்கே வசிப்பது? எப்படிக் காலட்சேபம் செய்வது? மாதச் சம்பளம் தருவதாக அவர்கள் சொன்னார்கள். அதை நான் திட்டமாக மறுத்துவிட்டேன். பொது ஊழியத்திற்கு ஒருவன் பெரிய சம்பளம் வாங்குதல் தகாது. மற்றும் நான் அங்கு பிறருக்கு வழிகாட்டியாயிருக்கவேண்டியவன். அக்காலத்தில் நான்கொண்டிருந்த மனோபாவத்தின்படி பாரிஸ்டர்களுக்குரிய உயர்ந்த தோரணையுடன் வாழ்க்கை நடத்தி, இந்திய சமுகத்துக்குப் பெருமையளிப்பவனாயிருக்கவேண்டுமென எண்ணினேன். இதற்குச் செலவு ஏராளமாக ஆகும். மேலே கூறியது போன்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தினால் அதற்காக அடிக்கடி நிதி திரட்டும்படி நேரிடும். அந்த ஸ்தாபனத்தையே என் ஜீவனத்துக்கும் நம்பியிருத்தல் தகுதியாகாதன்றோ? அதனால் ஊழியம் புரிவதற்கு எனக்குள்ள சக்தி குறைவுபட்டு விடும். இதையும் இதுபோன்ற பிற காரணங்களையும் முன்னிட்டுப் பொது ஊழியத்திற்கு ஊதியம் பெற்றுக்கொள்ள நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். ஆனால் முக்கியமான வியாபாரிகள் என்னைத் தங்கள் வழக்குகளுக்கு வக்கீலாக அமர்த்தச் சம்மதித்து அதற்காக முன் பணமும் கொடுக்கமுடியுமானால் நான் அங்கேயே தங்கத்தயாராயிருப்பதாகத் தெரிவித்தேன். ஒரு வருஷத்திற்கு முன் பணம் கொடுத்தால் போதுமென்றும், அந்தக் காலத்தில் ஒருவரோடொருவர் கலந்து வேலை செய்து அதன் பயன்களைப் பார்த்துக்கொண்டு பின்னர் இருகட்சிக்கும் சம்மதமானால் இந்த ஏற்பாட்டை நீடிக்கச்செய்யலாமென்றும் சொன்னேன். இதை எல்லாரும் பிரியத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த பகிர்முகக் கிளர்ச்சியுடன் கூட அந்தர்முகமான அபிவிருத்தி முயற்சியும் தொடங்கப்பட்டது. தென்னாப்பிரிக்கா முழுவதிலும் வெள்ளைக்காரர்கள், இந்தியரின் வாழ்க்கை முறைகளை ஆதாரமாகக் காட்டியே அவர்களுக்கு விரோதமான கிளர்ச்சிசெய்து வந்தார்கள். இந்தியர்கள் அழுக்குப் பிடித்தவர்களென்றும், கையழுத்தக்காரர்களென்றும் அவர்கள் எப்போதும் சொல்லிவந்தார்கள். வியாபாரம் செய்யுமிடத்திலேயே இந்தியர் வாசமும் செய்தனர். அவர்கள் வீடுகளோ வெறும் குச்சுகள். தங்கள் சொந்த சௌகரியங்களுக்காகவும் அவர்கள் பணம் செலவு செய்யமாட்டார்கள். தூய்மையுள்ளவர்களும், தாராளக் கையர்களும், தேவைகள் ஏராளமாயுடையவர்களுமான வெள்ளைக்காரர்கள் இத்தகைய அழுக்குப் பிடித்த லோபி மக்களுடன் வியாபாரத்தில் எப்படிப் போட்டியிட முடியுமென்று கேட்கப்பட்டது. ஆதலின் காங்கிரஸ் கூட்டங்களில் இம்மாதிரி விஷயங்களைக் குறித்து உபந்நியாசங்களும், வாதங்களும் நிகழ்ந்தன; யோசனைகள் சொல்லப்பட்டன. குடும்ப சுகாதாரம், சொந்த சுகாதாரம், கடைகளும், வசிக்குமிடங்களும் தனித்தனி இருக்கவேண்டுவதின் அவசியம்; பணக்கார வியாபாரிகள் தங்கள் அந்தஸ்துக்கேற்ற முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது என்னும் இதுபோன்ற விஷயங்களைப்பற்றிப் பேசப்பட்டன. நடவடிக்கைகள் குஜராத்தி மொழியில் நடைபெற்றன.

இந்தியர்கள் இவ்வாறு எவ்வளவு அநுபவக் கல்வியும், அரசியல் பயிற்சியும் பெற்றார்கள் என்பதை வாசகர்கள் காணலாகும். காங்கிரஸ் ஆதரவில், ஒப்பந்தத் தொழிலாளரின் சந்ததிகளும், நேட்டாலில் பிறந்தவர்களும், ஆங்கிலமொழி பேசியவர்களுமான இந்திய இளைஞர்களின் நன்மைக்காக 'நேட்டால் இந்தியக்கல்விச் சங்கம்' என்னும் பெயருடன், ஒரு சங்கம் ஸ்தாபித்தோம். அதன் அங்கத்தினர் பெயருக்கு ஒரு சிறு தொகை சந்தாவாகக் கொடுத்தனர். மேற்கூறிய இளைஞர்கள் அடிக்கடி சந்திக்க வசதி ஏற்படுத்தலும், அவர்களுக்குத் தாய் நாட்டினிடம் அன்பு உண்டு பண்ணலும், தாய் நாட்டைப் பற்றிய விவரங்களை அறிவித்தலுமே அச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். சுதந்திர இந்தியர்கள் அவர்களைத் தங்கள் இரத்த சகோதரர்களாய்ப் பாவிக்கிறார்களென்பதை அவர்களுக்கு அறிவுறுத்தலும், அவர்களிடம் சுதந்திர இந்தியர்களுக்கு மரியாதை உண்டுபண்ணலுங்கூட அச்சங்கத்தின் மூலம் இயலுமென்று உத்தேசிக்கப்பட்டது. காங்கிரஸுக்கு நிதி தாராளமாக இருந்தபடியால் அதன் செலவுக்குக் கண்டு மிகுதியும் ஆயிற்று. இம்மிகுதித் தொகையைக் கொண்டு நிலம் வாங்கப்பட்டது. அந்நிலம் இன்றளவும் வருவாய் ஈய்ந்து வருகிறது.

இந்த விவரங்களெல்லாம் அவசியமென்று கருதியே நான் தந்திருக்கிறேன். இவை தெரிந்திராவிட்டால் சத்தியாக்கிரஹம் முயற்சி எதுவுமின்றித் தானே தோன்றியதெப்படி என்றும், இந்தியர்கள் இயற்கையாகவே அதற்கு எப்படித் தயாராகி வந்தார்களென்றும் வாசகர்கள் தெளிவாக அறியமுடியாது. காங்கிரஸுக்குப் பிற்காலத்தில் நேர்ந்த கஷ்டங்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்களால் அது தாக்கப்பட்டது; அந்தத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து அது தப்பியது முதலான காங்கிரஸின் பிந்தைய சரித்திரத்தை நான் விடுத்துச் செல்லவேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் ஒன்றும் மட்டும் இங்கே குறிப்பிடுதல் அவசியம். இந்திய சங்கத்தை மிகைப்படுத்தும் வழக்கத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. தங்களிடமுள்ள குறைகளை அவர்கள் உணருமாறு செய்ய எப்போதும் முயன்று வந்தோம். வெள்ளைக்காரர்களின் வாதங்களில் உண்மை ஏதேனும் இருந்தால் அதை உரிய அளவில் ஒப்புக்கொண்டோம். சமத்வம், சுயமரியாதை இவற்றிற்கு ஊறு விளையாமல் வெள்ளைக்காரர்களுடன் ஒத்துழைப்பதற்குச் சந்தர்ப்பம் நேர்ந்தால் அதைக் கைவிடாமல் மனப்பூர்வமாகக் கலந்துழைத்தோம். இந்தியர் இயக்கத்தைப் பற்றிப் பத்திரிகைகள் வெளியிடச் சம்மதித்த அளவுக்கு விவரங்கள் அளித்து வந்தோம். இந்தியர்கள் பத்திரிகைகளில் அநியாயமாகத் தாக்கப்பட்டபோதெல்லாம் அவற்றிற்குப் பதில்கள் எழுதியனுப்பினோம்.

டிரான்ஸ்வாலில் நேட்டால் இந்தியக் காங்கிரஸ் போன்ற, ஆனால் அதினின்றும் தனித்து நின்று ஸ்தாபனம் ஒன்று இருந்தது. இவ்விரண்டு ஸ்தாபனங்களின் அமைப்பிலும் சிற்சில வித்தியாசங்கள் இருந்தன. அவற்றைப் பற்றி இங்கே விரித்துரைத்தல் அநாவசியம். இவ்விரண்டு ஸ்தாபனங்களின் அமைப்புகளினின்றும் மாறுபட்ட அமைப்புடன் கேப்டவுனிலும் இந்தியர் ஸ்தாபனம் ஒன்று இருந்தது. ஆனால் இந்த மூன்று சபைகளின் நடவடிக்கைகளும் ஏறக்குறைய ஒத்திருந்தன.

நேட்டால் காங்கிரஸுக்கு 1895-ம் வருஷ மத்தியில் ஓராண்டு நிறைந்தது. அட்வொகேட்டாக நான் செய்த வேலையும் என் கட்சிக்காரர்களுக்குத் திருப்தியளித்தபடியால் நேட்டாலில் என் வாசம் நீடிக்கலாயிற்று. 1896-ல் சமுகத்தின் அநுமதிபெற்று ஆறுமாத காலம் இந்தியாவுக்குச் சென்றிருந்தேன். அந்த ஆறுமாதம் முடிவதற்குள், உடனே திரும்பி வரும்படி நேட்டாலிலிருந்து தந்தி வந்தது. அவ்வாறே நான் சென்றேன். 1896, 97ம் ஆண்டுச் சம்பவங்களைக் கூற ஒரு தனி அத்தியாயம் தேவையாகும்.

நேட்டால் பெரிய நீதிமன்றத்தில் (ஸுப்ரீம் கோர்ட்) அட்வொகேட்டாகத் தொழில்நடத்த அநுமதி வேண்டி மனுச் செய்துகொண்டேன். நேட்டால் வக்கீல் சங்கத்தார் என் மனுவை ஆட்சேபித்தார்கள். இதற்கு அவர்கள் கூறிய ஒரே ஆதாரம், கருநிறத்தார் பாரிஸ்டர்களாக வருவார்களென்பதைச் சட்டம் செய்த காலத்தில் எதிர் பார்த்திருக்க முடியாதென்பதே யாகும். பெயர் பெற்ற அட்வொகேட்டும், நேட்டாலின் அட்டர்னி ஜெனரலும், பிற்காலத்தில் நேட்டால் முதன் மந்திரியாயிருந்தவருமான காலஞ்சென்ற மிஸ்டர். எஸ். கோம்ப் என் சார்பாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். தலைமையான பாரிஸ்டர் இத்தகைய விண்ணப்பங்களை ஊதியமில்லாமல் சமர்ப்பிப்பது நெடுநாளாக நடந்து வந்த வழக்கம். இவ்வழக்கத்தை யனுசரித்தே அவர் என் மனுவைச் சமர்ப்பித்தார். மேலும், என்னுடைய முதலாளிகளின் பிரதம வக்கீலும் அவரேயாவர். நீதிமன்றத்தார் வக்கீல் சங்கத்தின் ஆட்சேபத்தை நிராகரித்து என் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு, வக்கீல் சங்கத்தின் ஆட்சேபமானது; அவர்கள் அதை விரும்பாவிடினும் என் பெயரை இன்னும் பிரபலப்படுத்திற்று. தென்னாப்பிரிக்கா பத்திரிகைகள் வக்கீல் சங்கத்தைக் கேலிசெய்ததுடன் அவற்றில் சில எனக்கு வாழ்த்தும் கூறின.

தாற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கமிட்டி நிரந்தர ஸ்தாபனமாக்கப்பட்டது. நான் இந்தியக்காங்கிரஸ் மகாசபைக்கு ஒரு முறையேனும் போனதில்லையாயினும், அதைப்பற்றிப் படித்திருந்தேன். இந்தியாவின் மாபெருங் கிழவரான தாதா பாயை நான் பார்த்திருந்ததோடு அவரிடம் பெரும்மதிப்புக்கொண்டிருந்தேன். ஆகவே நான் காங்கிரஸ் பக்தனாயிருந்தேன்; அந்தப் பெயரையே பிரபலமாக்க விரும்பினேன். அநுபவசாலியல்லேனாதலால் புதிய பெயர் ஒன்று கண்டுபிடிக்க முயலவேயில்லை. ஏதேனும் தவறு செய்துவிடுவோமோவென்னும் பயமும் இருந்தது. ஆதலின் நேட்டால் இந்தியக் காங்கிரஸ் என்று அந்த ஸ்தாபனத்துக்குப் பெயரிடும்படி யோசனை சொன்னேன். இந்தியக் காங்கிரஸ் மகாசபையைப்பற்றி எனக்குத் தெரிந்த சொற்ப விவரங்களை அரைகுறையாக அவர்களுக்கு அறி

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பங்குனிப் பொங்கல்.

### ஆடு, கோழிகளின் அலறுதல்.

நம்முடைய நாட்டில் எங்கும் மாரியம்மன் பத்திரகாளியம்மனுக்குப் பொங்கலிடும் நாள் வந்துவிட்டது. ஆடு கோழிகளுக்கு அழிவுகாலமும் வந்துவிட்டது. நீங்கள் கோவில் முன்பாகவோ, அல்லது உங்கள் வீட்டின் முன்பாகவோ . பொங்கலிடும் போது ஏழை உயிர்ப்பிராணிகளாகிய ஆடு, கோழிகளை அறுத்து அவைகளின் உதிரம் சிந்தி உங்கள் வீட்டின் முன்பாகவும் கோவில் முன்பாகவும் ஆபாசங்களை உண்டுபண்ணிப் பாவங்களை ஏற்கிறீர்கள். அதுவுந்தவிர சிலர் பொங்கலுக்கு நாலைந்து மாதத்துக்கு முன்னதாகவே ஆடு, கிடாய்களை சிறு குட்டியாயிருக்கும் போதே வாங்கி அவைகளைத் தங்களுடைய அருமைப் பிள்ளைகளை வளர்ப்பதைப்போல் அவைகளுக்கு வேண்டிய இரைகளை தின்னவைத்தும், அவ்வாறு அவைகள் தின்னுவிட்டால் இரைகளை எடுத்து ஊட்டுவதும் பின்பு குளங்களிலோ, ஆறுகளிலோ அவைகளைக்கொண்டு போய்த்தினந்தோறும் தேய்த்து குளிப்பாட்டுவதும், இவ்வாறு அவைகளை வெகு பக்தோபஸ்தாய் வளர்த்து பொங்கல் தினத்தன்று பொங்கலும் வைத்து விட்டு தாங்கள் அருமையாய்—பிரியமாய் வளர்த்து வந்த ஆடுகளையோ, கிடாய்களையோ கோவிலுக்குக் கொண்டு வருவார்கள். கொண்டுவந்து அவைகளின் மேல் தீட்டுக் கழிப்பதற்காக ஜலத்தைக் கொண்டுவந்து விடுவார்கள். கிடாய் ஜலம் பட்டவுடனே குளிர்ச்சியினால் சிலு சிலுப்பி தன்னுடைய உடம்பைக் குலுக்கிவிடுகிறது. உடம்பைக் குலுக்கினால் தெய்வம் வெட்டுவதற்கு அனுமதி கொடுப்பதாம்! தண்ணீரை விட்டவுடனே எப்பொழுது தன்னுடைய உடம்பை சிலுசிலுப்பிக் குலுக்கும் என்பதாக வெட்டுவதற்கு வாளும் கையுமாக ஒருவரும், கால்களையும் தலையையும் இறுகப் பிடித்துக் கொள்ளுவதற்கு இரண்டு பேரும் நின்று அது சிலு சிலுப்பித் தன்னுடைய உடம்பைக் குலுக்ினவுடன் தாங்கள் நாலைந்து மாதகாலமாக வெகு பிரியத்தோடு வளர்த்தபாசத்தை ஒருங்கே மூலையில் கட்டிவைத்துவிட்டு கொஞ்சமும் இரக்கமின்றி அதை தலை வேறு உடம்பு வேறாக வெட்டி வீழ்த்தி விடுகிறார்கள். அம்மா! பரிதாபம் !! பரிதாபம் !!! கொஞ்சமும் ஜீவகாருண்யமின்றி ஏழை உயிர்ப் பிராணிகளாகிய அவைகளை வதை செய்யலாமா? இது தர்மமாகுமா? அல்லது நீதியாகுமா? அவைகள் தங்களுடைய உடம்பைக் குளிரினால் குலுக்கினவுடன் நம்மள் சாமி கிடாய் கேட்கிறது என்றல்லவோ அவைகளை இரக்கமின்றி வெட்ட துணிகிறீர்கள்! அது அப்படி அல்ல. அவைகள் தங்களால் குளிர்ச்சி தாங்க முடியாமல் தான் உடம்பை குலுக்கிறதே தவிர சாமி ஒன்றும் கேட்கவில்லை. அப்படிச் செய்வதினால் பாவம் என்னும் பிசாசு பின் தொடரும் என்று அறியீர்களோ? மனுஷர்கள் இவ்வாறு பாவம் செய்து கெட்டுப்போனதினாலே அவர்களுடைய ஆத்மா ஒரு புற்றுப்போலவும் அவர்கள்செய்யும் கெட்டநடத்தை எல்லாம் அதிலே புகுந்து வசிக்கிற விஷப்பாம்புகள் போலவும் ஆகும். அந்தப் பாம்பு பிடிப்பவனாலும் மலை போலிருக்கும் யானையையும் கடித்துக் கொல்லக்கூடிய சக்தி அதனிடத்திலிருக்கிறது. நாம் பாவம் செய்தவுடன் நம்முடைய மனமானது நம்மைக் கண்டிக்கவில்லையா? நெஞ்சே நீ கொலை செய்தாய்; கடவுள் இருக்கிறார்; பார்க்கிறார்; தண்டிப்பார் என்று எண்ணவேண்டாமா? நாம் பாவத்துக்கும், பழிக்கும் உட்பட்டால் நம்முடைய நெஞ்சு நம்மைச் சுட்டுவில்லையுடு? நாம் இலேசாய் அற்பத்தொழிலென்னும் பாவத்தைச் செய்கிறோம். அதைச்செய்யும் போது அது நமக்கு, கடுகு அத்தனையாகத் தோன்றுகிறது. ஆனாலும் இனிமேல் அது மலையத்தனையாக வந்து நம்மைக் கெடுக்கும் என்று நாம் எண்ணி நம்முடைய உயிரும் உடலும் அதிரவேண்டாமா? அவைகளின் உயிரைப்போக்கிப் பொங்கல் வைத்து நாம் சுவாமியை வழிபடுவதைவிட பால் பொங்கலிட்டு பானகம் கரைத்து மாவிளக்கு ஏற்றி கடவுளை வழிபடுவதே மேன்மை. அவைகளே நமக்குப் போதுமானது. இவ்வித ஆராதனையே சாலச்சிறந்தது. ஆடு, கோழிகளை அறுத்து பாவத்தை ஏற்காதீர்கள். அவைகளையும் நம்மைச் சிருஷ்டித்த ஒரு சிருஷ்டிகர் தானே உண்டாக்கினார். நம்மை எவ்வாறு பாதுகாத்துரட்சித்துவருகிறாரோ அது போலவே அவைகளையும் பாதுகாத்து ரட்சித்து வருகிறார். அதுவும் தவிர நம்மள் பிள்ளைகளுக்கோ அல்லது பந்து ஜனங்களுக்கோ ஏதாவது ஒரு வியாதிகண்டு விட்டால் உடனே கருப்பசாமி, மாரியம்மன், பத்திரகாளியம்மன் முதலிய செல்லவர் சாமிகளுக்கு "உங்களுக்குகருங்கிடாவெட்டிப் பொங்கலிடுகிறேன். இந்த வியாதி சுகமாகட்டும்" என்று நேர்ந்து கொள்ளுகிறோம். இவ்வாறு நம்முடைய வீட்டிலுள்ளவர்கள் வியாதிப்படவும் அந்த ஏழை உயிர்ப்பிராணிகள் கொலை செய்யப்படவும் வேண்டிய காரணமென்ன? நம்முடைய உயிர் பிழைப்பதற்காக அடுத்த உயிரைக் கொண்டுவந்து பலியிடுவது நியாயமா? நம்முடைய ஆன்மா வேறு அவைகளுடைய ஆன்மாவேறோ? எல்லாம் ஒன்றுதானே. அந்நகர்வல்லவோ அவைகளும் "உங்கள் மக்களும் நீங்களும் நோய்கொள்ள எங்கள் மக்களும் நாங்களும் என்செய்வோம்" என்று அலறுகின்றன. ஆகையினால் சகோதரர்களே! உங்கள் பொங்கல் பண்டிகைக்கு ஆடு, கோழிகளை அறுக்கும் வழக்கத்தை இன்றேட தொலைத்து விடுங்கள். "நன்றென்பதை இன்றே செய்யுங்கள்" பால் பொங்கலிட்டு பானகம் கரைத்து கடவுளை வழி பட்டு நித்தியானந்தம் என்னும் மோட்ச சாம்ராச்சியம் அடைய உங்களை தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன். சுபம்.

எஸ். சண்முகம்,

தூத்துக்குடி.

## பழக்க வழக்கம்.

தமிழ் நாடாகிய நம்மிந்தியநாடு அனைவராலும் புகழும்படியான ஓர் புண்ணிய நாடெனபது அறிந்தவிஷயம். அப்புண்ணிய நாட்டில் பிறந்த யாவரும் நாம் எவ்வித புண்ணிய சீலர்களாகவிருக்க வேண்டும்!

சகோதரர்களே! நம்முள் சிலர் அவன் உயர்ந்தவன்; இவன் தாழ்ந்தவன் என்று பாகுபாடுகள் செய்து வைப்பது சிலரின் பழக்கவழக்கமேயாகும். சிலர் தம் வீட்டில் தம் குழந்தைகளை இவ்வழக்கத்திற்குச் செய்து வைத்து விடுகிறார்கள். பின்னர் அக்குழந்தைகள் வாலிபர்களானதும், அவ்வழியை ஸ்திரப்படுத்தி அவ்வழியே செல்கிறார்கள். இன்னும் வீட்டில் பெரியோர்களாயிருக்கின்றவர்கள் கெட்ட வார்த்தைகள் பேசுவதைக் கிட்ட இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளும் கூடிய சீக்கிரத்தில் அப்பாஷைகளைக் கற்றுக் கெட்டுவிடுகிறார்கள். சான்றாக, வீதிகளில் பார்த்தால் சிறு குழந்தைகள் பேசும் வார்த்தைகளைக் கேட்கச் சகிக்கமுடியுகில்லை. ஏன் அவர்கள் அப்படிப் பேசுகிறார்கள்? பெற்றோர்களிடமிருந்து பழகிய துர்ப்பழக்கமே.

ஆனதால் பெரியோர்களே! தாங்களே இப்பாடத்தை முதலில் மறந்து விடவேண்டும். கெட்ட பேச்சுகளைப் பேசுதல் கூடாது. அங்ஙனமிருப்பீர்களாயின் சிறு குழந்தைகள் சீக்கிரம் முன்னேறிவிடுவார்கள். அன்றே நம் மிந்தியநாடு புனிதநாடாகும். இப் பேருதவியைப் பெரியோர் அனைவரும் செய்து நம் நாடு புண்ணியநாடெனப் புகழுறச்செய்ய வேண்டுகிறேன்.

சிவ. கு. சிவசுப்பிரமணியன்.

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 43.

### இந்தியாவுக்குப் பிரயாணம்.

இந்தியாவுக்கு என்னுடன் வரவேண்டுமென்னும் எண்ணத்துடனேயே ஸ்ரீ. காலன்பாக் என்னுடன் இங்கிலாந்துக்கு வந்திருந்தார். நாங்களிருவரும் ஒரே வகையான வாழ்க்கையைப் பின்பற்றுவதற்காக ஒன்றாகவேவசித்துவந்தோம். ஜர்மானியர்கள் அதிகக்கண்டிப்பாயிருந்தபடியால் ஸ்ரீ. காலன்பாக்குக்கு பிரயாண அனுமதிச் சீட்டுக்கிடைக்குமோவென்பதில் எங்களுக்கு அதிக சந்தேகமிருந்தது. நானும், ஸ்ரீ. ராபர்ட்ஸும் எங்களாலியன்றவரை ஸ்ரீ. காலன்பாக்குக்கும் அனுமதிச் சீட்டுப் பெற எவ்வளவோ முயற்சி செய்தோம். ஸ்ரீ. ராபர்ட்ஸ் இந்திய வைசிராய்க்கு ஒரு தந்தியும் கொடுத்தார். ஆனால் வைசிராயிடமிருந்து, "இந்தியா சர்க்கார் அத்தகைய அபாய நிலைமையை மேற்போட்டுக் கொள்ள சித்தமாயில்லையாதலால், அனுமதியளிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்" என்னும் பதில் கிடைத்தது. நாங்களனைவரும் இந்தப் பதிலின் ஆழ்ந்த கருத்தை அறிந்து கொண்டோம். ஸ்ரீ. காலன்பாக்கை விட்டுப் பிரிவதென்பது எனக்கு மிக்க மனவருத்தத்தைத் தரக்கூடியதாக இருந்தது. ஆனால் அவர், எங்கள் பிரிவைப்பற்றி வருந்துவது இன்னும் அதிகமாக இருந்தது. அவர் இந்தியாவுக்கு வந்திருந்தால் இப்போது விவசாயியைப் போலவும், நெசவுக்காரனைப் போலவும் எளிய வாழ்க்கையை அனுஷ்டித்துக் கொண்டிருப்பார். இப்போதும் அவர் தென்னாப்பிரிக்காவில் சித்திர வேலையைச் செய்துகொண்டு காலந்தள்ளிவருகிறார்.

நாங்கள் பிரயாணம் செய்வதற்கு மூன்றாவது வகுப்பு டிக்கெட்டையே பெற விரும்பியபோதும், அது கிடைக்காமற் போனமையால் இரண்டாவது வகுப்புப் பிரயாணச்சீட்டு வாங்கவேண்டியதாயிற்று. நாங்கள் தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டுவந்த உலர்ந்த பழங்களை உடன் எடுத்துச் சென்றோம். ஏனெனின், கப்பலில் அப்பழங்கள் அகப்படுவது கஷ்டம். ஆனால் அக்கப்பலில் அப்போதே பறித்த பழங்கள் தான் அகப்படும்.

### பிரயாண வசதி.

டாக்டர். ஜீவராஜமேத்தா பிளாஸ்திரியைக் கொண்டு என் முதுகெலும்பில் கட்டுக்கட்டியிருந்தார். மேலும் அவர், நான் செங்கடலைக் கடக்கும் வரையில் அக்கட்டை அவிழ்க்கக்கூடாதென்றும் கூறியிருந்தார். இரண்டு நாள் மட்டும் நான் அவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டிருந்தேன். ஆனால் பிறகு என்னால் சகிக்க முடியவில்லை. ஆதலின் நான் மிகச் சிரமத்துடன் அக்கட்டை அவிழ்த்து மீண்டும் சுத்தமாக ஸ்நானம் செய்ய ஆரம்பித்தேன்.

நான் பெரும்பாலும் கொட்டைகளையும், பழங்களையுமே சாப்பிட்டுவந்தேன். நான் நாளுக்கு நாள் அதிகமான தேக சௌக்கியத்தையடைந்து வந்தேன். மேலும், சூயஸ் கால்வாயில் நுழையும் போது என் தேக நிலை சௌக்கியமாகவே இருந்தது. நான் பலஹீனமாக இருந்தபோதிலும் எத்தகைய அபாயமுமில்லை என்பதை உணர்ந்தேன். நான் தேகாப்பியாசங்களை அதிகமாகச் செய்து கொண்டேபோனேன். என் தேக நிலையில் இத்தகைய மாறுதல் ஏற்பட்டதற்கு அக்கடல் காற்றே காரணமாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

### ஆங்கிலேயர் மனோபாவம்.

தென்னாப்பிரிக்காவிலிருந்துபிரயாணம் செய்தபோது நான் கவனித்ததை விட, இப்பிரயாணத்தில் ஒரு விஷயம் அதிகமாகக் கவனித்தேன். அதன் காரணம் இன்னதென்று எனக்கு விளங்கவில்லை. ஆங்கிலேயர்களுக்கும் இந்திய பிரயாணிகளுக்குமிடையில் நல்ல மனப்பான்மையிருக்கவில்லை. நான் சில ஆங்கிலேயர்களுடன் பேசிப் பார்த்தேன். அவர்கள் ஏதோ உபசாரத்துக்குப் பேசினார்களே யொழிய அந்தரங்க அபிமானத்துடன் பேசவில்லை. தென்னாப்பிரிக்கா கப்பல்களில் நான் சம்பாஷித்தது போன்ற மனமார்ந்த சம்பாஷணைகளை இக்கப்பலில் காணவும் முடியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால், தெரிந்தோ, தெரியாமலோ ஆங்கிலேயர்கள் தாங்கள் ஆளும் ஜாதியாரைச் சேர்ந்தவர்களென்றும், இந்தியர்கள் தங்களால் ஆளப்படும் ஜாதியாரென்றும், கருதுவதாகவே இருக்க வேண்டுமென்று எனக்குத்தோன்றுகிறது. எனவே, நான் விரைவில் வீடு போய்ச் சேர்ந்து இத்தகைய நிலைமையிலிருந்து விலக வேண்டுமென்று விரும்பினேன்.

நாங்கள் ஏடனுக்கு வந்து சேர்ந்ததும் எங்கள் நாட்டுக்கு வந்ததைப் போன்ற உணர்ச்சியையே பெற ஆரம்பித்தோம். ஏடன் வாசியாகிய ஸ்ரீ. கிகோபாதகவாஸ்ஜி டின்ஷாவை டர்பானில் சந்தித்து அவருடனும் அறிமுகம் செய்து கொண்டிருந்தோமாதலின் நாங்கள் ஏடன் வாசிகளை யறிந்தவர்களாகவே இருந்தோம்.

### பம்பாயில் வரவேற்பு.

சில தினங்கள் கழிந்ததும் நாங்கள் பம்பாய்க்கு வந்து சேர்ந்தோம். பத்து வருஷகாலம் வெளி நாடுகளில் திரிந்து விட்டுத் தாய் நாட்டுக்கு வந்து சேர்ந்ததில் நாங்கள் பெற்ற சந்தோஷத்துக்கோர் அளவில்லை.

ஸ்ரீ. கோகலேஎன்னைவரவேற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பம்பாயில் செய்திருந்ததுடன், அவருடைய மெலிந்த தேக நிலையிலும் அவரும் பம்பாய்க்கு வந்திருந்தார். நான் அவருடன் கலந்து ஆலோசித்து அவரது உபதேசங்களைக் கேட்டு சௌகரியமடைவதற்காகவே வந்திருந்தேன். ஆனால் ஈசுவரன் அபிப்பிராயம் வேறு விதமாக இருந்தது.

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### அனுதாபங்கள்.

பிராமணரல்லாதார் இயக்கத்தின் தலைவரும் பொதுஜன ஊழியத்திலிருந்த பேராவல் உடையவருமான மதுரை, ஸ்ரீமான் எம். டி. சுப்பிரமணிய முதலியாரவர்கள் 22-3-28-ல் மரணமடைந்ததைக் குறித்து நாங்கள் பெரிதும் விசனிக்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடையுமாறும் அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தார்களுக்கும் ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்களுக்கும் ஆறுதல் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

❀ ❀

நாடார் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப்பாடுபட்டு வந்தவரும், தஞ்சை ஜில்லா வாசிகளுக்குப் பேருபகாரமாயிருந்து பொதுஜன ஊழியம் புரிந்து வந்தவரும், மாயவரம் முனிசிபல் சேர்மனாக 8 வருடமிருந்து மிகுந்த முற்போக்கான வழியில் நிர்வாகம் நடத்தி வந்தவருமான ஸ்ரீமான் எஸ். டேவிட் நாடார் அவர்கள் 21-3-28-ல் விண்ணுலக மடைந்ததை குறித்து நாம் மிகவும் விசனிக்கிறோம். அவரது குடும்பத்தார்களுக்கு ஆறுதல் அளிக்கும்படி இறைவனை வேண்டிக்கொள்ளுகிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,

ப. வ. சோமசுந்தர நாடார்,

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## விடுமுறை.

நமது மித்திரன் வாசகசாலத்தில் நடைபெறும் உற்சவங்களில் பிரதானமானதாகிய பங்குனித் திருவிழா 27-3-28 முதல் 7-4-28 முடிய நடைபெறுவதில், மித்திய முக்கிய திருநாட்களையுத்தேசித்து வழக்கம்போல் நமது காரியாலயத்திற்கு ஒரு வாரம் விடுமுறையாகுமாதலால் அடுத்து 9-4-28-ல் வெளியிடாக வேண்டிய சஞ்சிகை நிறுத்தப்பெற்று 16-4-28-ல் வெளியிடப் பெறும் என்பதை நேயர்களறிய வேண்டுகின்றனம்.



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேது மின்றியெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமம் பொருளைத் திருவருளை
நினைவர்கச் சிந்தை செய்வாம்.

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு பங்குனி மீ உ௰௧ உ

## ஜாதி நிறத் தடைகள்.

உலகமென்னும் உடலுக்கு உயிராயிருந்து வருபவன ஆசியாக் கண்டமும், இந்தியா தேசமும் என்பதை ஐரோப்பா, அமேரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா ஆகிய கண்டத்தவர்கள் அறிந்தும் ஜாதி நிறத் தடைகளால் ஆசியாவாசிகளுக்கு முக்கியமாய் இந்திய மக்களுக்குச்செய்துவரும்கொடுமைகள் சகிக்க முடியாததா யிருக்கின்றன. கல்லு முள்ளும், காடு மேடுமாகவுள்ள நாடுகளைப் பண்படுத்தி அழகுறச்செய்து உண்பதற்கும் உடுப்பதற்குமுரிய விளைபொருட்களால் உயிர்ப்பிச்சை கொடுத்து மானங் காத்தவர்கள் இந்திய ஏழைமக்கள் என்பதை மறந்து வருகின்றார்கள். செய் நன்றி கொன்ற தோஷம் அவர்களைச் சேராமற் போகுமா? பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கு முக்கிய அங்கமா யிருந்துவரும் இந்திய நாட்டின் ஏழை மக்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலாவது எல்லாப் பிரஜைகளையும் போலிருக்க உரிமை கிடையாதா? அந்தோ! ஈச னருளிய இவ்வுலகம் யாருக்குச் சொந்தம்? ராணுவத் திமிர் ஒடிந்து ஆணவம் குறைந்தும், ஏழை மக்கள் பால் யாருக்கும் மனமிரங்கவில்லையே. சமாதானத்தை நிலைநாட்டவேற்பட்ட சர்வ தேச சங்கத்தின் உள் எத்திடக்கையே இன்னு மோர் உலக யுத்தத்திற்கு ஞாபகச்சின்னமாய் விளங்குகின்றதென்றால் மற்றதை விளக்கவும் வேண்டுமா?

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" எனும் பழமொழிக் கேற்ப, தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்களுக்கு ஓயாத தொல்லை ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. போயர் யுத்தம் நடந்த காலமுதற்கொண்டு இந்தியர் கஷ்ட நிவாரணத்திற்காக மகாத்மா காந்தி, கோபால கிருஷ்ண கோகலே, ஸரோஜினி தேவி, ஆண்ட்ரூஸ், ஸ்ரீநிவாச சாஸ்திரியார், வத்சுபி புல்லா முதலிய மேதாவிகள் பன்முறை இந்தியர் துன்ப நிவர்த்திக்காகத் தூது சென்றும், அந் நாட்டின் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் இந்நாட்டினரியல்பை நேரில் வந்து பார்த்துச் சென்றும் இந்தியா இன்ப வாழ் வெய்துவதற் கியலாதிருப்பதை என்னென்றுரைப்பது? சமீபத்தில் சாராய விற்பனை நிலையங்களில் இந்தியருக்கு ஏற்பட்டிருந்த கஷ்டம் ஒருவாறொழிந்தது மீண்டுமோர் தொல்லையுண்டாகிவிட்டது. அதாவது நிறத் தடைமசோதாவை செட்டாலிலும் அனுட்டானத்திற்குக் கொண்டு வரும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறதாம். இந்தியரும் தென்னாப்பிரிக்காச் சுதேசிகளும் தேர்ச்சிபெற்ற தொழிலாளிகள் செய்யக்கூடிய வேலைகளிற் சம்பந்தப்படவிடா மற்றடுத்துவிடுமா மந்தச் சட்டம். அச்சட்டம் அனுட்டானத்திற்கு வந்துவிடுமானல் ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வந்து சம்பவிக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இந்திய ஏஜெண்டாக ஆங்கு சென்றிருக்கும்கனம். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் பூணூலைப் பெருவிரலில் மாட்டிக்கொண்டு மூலையிலிருந்து மூக்கைப்பிடித்துப் பிராணுயாமம் செய்து காய சுத்திபண்ணிக் கன பொருள் சேர்த்துத் தம் காரியத்திற்கண்ணுயப் பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனு யிருந்துவிடுவாரா அல்லது இந்தியப் பராக்கிரமத்தை ஏற்ற சமயத்திற் காட்டுவாராவென்று பார்ப்போம்.

இந்தியாவில் விதைத்ததை தென்னாப்பிரிக்காவில் அனுபவிக்கிறோமென்று மகாத்மா காந்தி கூறியிருப்பதை நாம் பன்முறையும் எடுத்துக்காட்டி யிருக்கிறோம்.

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் [தானடங்காப்
பேதையிற் பேதையாரில்"

என்னும் பொய்யா மொழிக் கேற்பத்தானுணர்ந்து தன்னைச் சீர்திருத்த முடியாதவன் ஒரு குடும்பத்தையோ, தேசத்தையோ சீர்திருத்த முடியாது. அங்ஙனம் முயல்வதும் பேதமைபாகும். எந்நாட்டிலும் இந்தியர்களை நிறத் தடையால் புறக்கணிப்பது இந்தியாவிலுள்ள ஜாதித்தடையே காரணமென்பதில்யாதொரு சந்தேகமுமில்லை. இந்தியாவில் ஈஸ்வர பிரார்த்தனைக் காணிக்கைப் பணங்களால் வயிறு வளர்க்கும் பார்ப்பனர்கள் இந்தியர்களைத் தீண்டாதே, பாராதே, வாரதே, கேளாதே என்று தடை யுத்தாவு செய்து கொண்டிருக்கிறவரையும் வெளிநாடுகளில் எந்தச் சாஸ்திரியார் ஆச்சாரியார், முதலியார் ஆகியவர்கள் ஏஜெண்டாக விருந்தாலும் நிறத்தடை நீங்காதென்பதிற் தடையேயில்லை என்றுளப்போதும் சொல்வோம். ஏழை மக்கள் வரிப் பணத்திலிருந்து சம்பளம் வாங்கி வயிறு வளர்க்கும் மந்திரிகளும் தந்திரிகளும் மனிதனைத் தெருவில் நடக்கவிடாமல் 144 தடையுத்தரவு பிறப்பிக்கவும், சட்டப்படி வரி செலுத்துவோர் ஓர் ஸ்தானத்தில் அங்கமா யிருக்கலாமென்பதை யுணராமல் தஞ்சாவூர் ஜில்லாவில் நாடார்கள் தேவஸ்தானக் கமிட்டியில் அங்கமாயிருக்கலாமாவென்று குருட்டுத்தனமான கேள்விகள் கேட்டுக்கவுமிருக்கிறவரையில்இந்திய மந்திரி மீதும் மற்றெந்நாட்டின் மந்திரி மீதும் பழி சுமத்துவது சுத்த மடமையாகும். முதலாவது நாம் திருந்திக் கொள்வோமென்று தான் மகாத்மா காந்தியும் சொல்கின்றார். உங்களுக்குள்ள மடமையை நீக்கி நீங்கள் திருந்துங்களென்றுதான் வெளிநாட்டாரும் விளம்புகின்றார்கள். தஞ்சை ஜில்லாவில் நாடார்கள் தேவஸ்தானங்களைப் பரிபாலித்து வருகின்றார்கள். எத்தனையோ அர்ச்சகர்கள் அவர்கள் காலை முகர்ந்துகொண்டு திரிகின்றார்கள். இந்நாடார்கள் தேவஸ்தானக் கமிட்டி அங்கமாயிருக்கலாமாவென்ற கேள்வியும், இருக்கக்கூடாதென்ற தீர்மானமும் மத வுண்டவர்கள் மயங்கிச் செய்வார்களானல் மிஸ். மேயோ எழுதியதில் என்ன குற்றமென்று கேட்கின்றோம். வெளிச்சமுண்டானல் இருள் உடனே அகலுமென்பதை இனியேனும் உணர்ந்து நடப்பார்களாவென்று பார்ப்போம்.

# குறிப்புகள்.

### நாடார் மகாஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

மதுரையில் கூடிய நமது 10-வது மகாநாட்டில் நிறைவேறிய "நம் நாடார் மகாஜனங்களால் நடத்தப்படும் பொங்கல் உற்சவங்களில் ஜீவ பலியிடுவதை நிறுத்தவேண்டும்" என்ற தீர்மானம் சங்கம் கவுன்ஸில் மீட்டிங்கிலும் அங்கீகாரமாகி அதை அமுலுக்குக்கொண்டுவர காரியதரிசிகளுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதற்கேற்ப, இது பற்றி சங்கம் காரியதரிசிகள் சர்க்குலர் பிறப்பித்திருக்கின்றனர். அதை மற்றொரு பத்தியில் பிரசுரித்திருக்கிறோம். சென்ற வாரமித்திரனிலும் அனுபந்தமாக வெளியீடு செய்யப்பட்டிருக்கிறது. நமது "நாடார் மகாஜன சங்கம்" இப் புனித காரியத்தை யேற்று வேலை செய்வது பற்றிப் பெரிதும் போற்றுகிறோம். சமூக முன்னேற்றத்திற்கு ஆத்மார்த்த ஞானமும் அவசியம் வேண்டியதென்பதையாரும் ஒப்புக்கொள்ளாமலிரார். எல்லோரும் பாவத்தினின்று விடுபட வேண்டுமென்பது தான் தேவசம்மதம். இறைவழிக் கிலக்காயும் பிறருக்கு யாதொரு கஷ்ட நஷ்டமுமின்றி நமது சமூகம் முன்னேற வேண்டுமென்ற நமது விருப்பத்திற்கும், நமது சங்க நோக்கத்திற்கும் ஏற்றதாயும் நாம் பிற ஜீவ இம்சை புரியாதிருக்கவேண்டியது நம் கடமையாகும். ஒரு சிலர் வழக்கம் வழக்கம் என முழக்கலாம். ஒரு வழக்கம் கெட்ட வழக்கம் எனத்தெற்றெனத் தெரியும்போது அதை யொழித்துவிட வேண்டியது தான் உத்தமமாகும். ஆகையால் நமது மகாஜனங்கள் நமது முன்னேற்ற சாதனமான "நாடார் மகாஜன சங்கம்" கேட்டுக்கொள்கிறபடி ஜீவபலியிடுவதை நிறுத்தி அதன் பயனும் நமது முன்னேற்றத்தை யொருபடி உயர்த்திக்கொள்ள வேண்டுகிறோம்.

### தொவுஞ்சை நாடார்கள்.

பர்மா தேச தொவுஞ்சை நகரில் வாழ்ந்துவரும் நாடார் பெருமக்கள் ஒற்றுமை நீங்கப்பெற்று பொதுக்காரியங்கள் தடைப்பட்டுபோகப் பார்த்திருப்பது உசிதமல்லவாகையால்மனமாச் சரியங்கள் நீக்கி ஆங்கு நாடார் சமூகப் பிரகாசம் காட்டிப் புகழுற்றிருக்க வேணுமெனவும், கூடிய சீக்கிரத்தில் ஒற்றுமை நிலவிவிடும் என நம்புகிறோம் எனவும் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். ஆனல் எமது நம்பிக்கையின்படி அல்லாமல் இன்னும் ஒற்றுமை ஆனபாடில்லை யென ஆங்கிருந்து பலர் முறையீடு செய்திருக்கிறார்கள். பிணக்குள்ளோருக்கு ஒற்றுமையால் உறும் பெருமை தெரியாமலிராது. அவர்களுக்கு நம் சமூக முன்னேற்றத்தில் பிரியமில்லை யென்பது மல்ல. எனவே அவர்களுக்கு அதிகம் சொல்வது அவசியமில்லை. விட்டுக் கொடுப்பதில் தான் அவர்கள் நாட்டங் கொள்ளவில்லை யென்று கூறுகிறோம். ஆனல் அவர்கள் உயரிய நோக்கங் கொண்டு பொதுக் காரியங்கள் செவ்வன நடைபெற வேண்டுமென்று எவ்வகை மனமாச்சரியமிருப்பினும் ஒதுக்கிவிடவேண்டியது அவசியம். இனியேனும் மனராசி கொள்ளவேண்டுகிறோம். விரைவில் வேற்றுமையொழித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து பொதுக்காரிய வுணர்ச்சி செய்வார்களாவென மீண்டும் எதிர்பார்க்கின்றோம்.

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### நாடார் மகாஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

தற்கால உலகப்போக்கிற் கிணங்கவும், சமூக சீர்திருத்தத்தை யனுசரித்தும், சுகாதாரவிர்த்தியைக் கைக்கொண்டும், 1925-ஞு ஜூன் மீ 9உ மதுரையில் கூடிய நமது 10-வது கான்பரன்ஸில் நம்மால் 5-வது தீர்மானமாக:—"நம் நாடார் மஹாஜனங்களால் நடத்தப்படும் பொங்கல் உற்சவங்களில் ஜீவபலியிடுவதை நிறுத்தவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்று ஏகோபித்து நிறைவேற்றிய தீர்மானத்தை 1927-ஞு ஏப்பிரல்மீ 30உ நடைபெற்ற ஸ்பெஷல் கௌன்ஸில் மீட்டிங்கில் அமுலுக்கு கொண்டுவருமாறு காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உங்களது மேலான நோக்கத்திற்கிணங்க, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் நமது ஜன சமூகத்தவர்களால் ஆங்காங்கே கொண்டாடப்படும் பொங்கல் உற்சவங்களில் ஜீவபலியிடுவதை அறவே நிறுத்தி உங்களது உயரிய கொள்கையை நிலைநாட்டும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பிறருக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமுமின்றியே நமது சமூக முன்னேற்றம் நடைபெற வேண்டுமென்பது நமது சங்கத்தின் நோக்கமும் உங்களது விருப்பமுமாதலால், நம்மை ரக்ஷித்து அருள் புரியும்படி தெய்வசன்னிதானங்களில் நம்மால் நடத்தப்பெறும் பிரார்த்தனைகளில் பிற ஜீவஹிம்சையின்றிச் செய்யவேண்டியதே நமது கடமையாகவுமிருக்கிறது.

ஆதலால், ஜீவபலியிடுவதை அறவே அகற்றிவிடும்படி மீண்டும் வேண்டிக் கொள்கிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
காரியதரிசிகள்.

### புதிய சட்டமெம்பர்.

திவான்பகதூர்– ஸ்ரீமான்எம். கிருஷ்ண நாயர் அவர்கள் சட்ட மெம்பர் ஸ்தானத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட நமது மன்னர் பிரான் அங்கீகாரம் செய்துவிட்டார்.

### புதிய தோற்றம்

டாக்டர் பெஸண்டம்மையார் "கிராம சங்கம்" என்றொரு சங்கம் புதிதாகஸ்தாபித்திருக்கிறார். அதில் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் உள்பட சிலர் சேர்ந்திருக்கின்றனர். அவ்வம்மையார் "நியு இந்தியா" என்னும் ஒரு தினசரிப்பத்திரிகையும் 10-4-28 முதல் நடத்தப்போகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பிராமணரல்லாதார் இயக்கம்.

## பஞ்சமர்களிடை பிரசாரம் வேண்டும்.

நம்நாட்டில் வேரூன்றி நிற்கும் பிராமணரல்லார் இயக்கமரம் சுயமரியாதைக் கனி பழுத்துக்கொண்டிருக்கிறது. அக்கனி புசிப்பதற்கு பிராமணரல்லாரனைவரும் ஆவலுடன் நின்று கொண்டிருக்கிறார்கள். அக்கனியைப் பிராமணரல்லார் அனைவரும் பகிர்ந்து சாப்பிட வேண்டும். தத்தமக்ககப்பட்டால் போதுமென்று தமக்குப் பின்னணியில் நிற்பவரை நோக்காது விட்டுவிடக் கூடாது. கனி வேண்டுமானால் மரத்தருகில் வரட்டும் என்று தம் காரியத்தில் மட்டும் கருத்தாயிருந்து விடக் கூடாது. அப்படி யிருப்பது அன்பைக் குறிக்காது; பிராமணரல்லார் என்ற சொல்லுக்கு அர்த்தமுமில்லை. மரத்தருகில் நிற்பவர்களும் அவர்களுக்குப் பின்னால் நிற்பவர்களும் யார் யார் எனப்பார்ப்போம். அவர்கள் முறையே சாதி இந்துக்களென்று சொல்லிக் கொள்பவர்களும், பஞ்சமரென்று பகரப்படுபவர்களுமே யாவர்.

பஞ்சமரென்போர் பின்னால் நிற்பானேன்? அவர்களும் முன்னணியில்வந்து விடக் கூடாதா? முன்னணிக்கு வர சக்தியுண்டு. ஆனால் முன் அவர்கள் அடிமைக்குழியில் அமிழ்ந்திருந்த தன்மையானது இருந்த உருவதால் பயந்து கொண்டு நெருங்காமலிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றின்மேலொன்றாய் வைத்த இரு கனத்த பாரங்களினால் அமிழ்த்தப்பட்டவர்கள். பிராமணரல்லா சாதி இந்துக்களின் பாரமும், அவர்கள் தோளில் சவாரி செய்துகொண்டிருந்த பிராமணர்களின் பாரமுமாக இருபாரங்கள் தாங்கி ஆழ்ந்தவர்கள். முன்னால் பிராமணரல்லா உயர்சாதிகள் அவர்களுக்குச் செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல. இப்போதுமென்ன? அறிவிலா மக்கள் பற்பல விடங்களில் அவர்களுக்குப் புரியும் அட்டூழியங்களுக்கென்ன குறைவா? மட்டந்தட்ட வேண்டுமென மார்தட்டி நிற்பவர்கள் மலிந்தே யிருக்கிறார்கள். இந்நிலையில் இப்பஞ்சமர்கள் உணர்ச்சிபெற்று சுயமரியாதைக் கனிதின்ன முந்துவார்கள் என்பது முடியாத காரியம். ஏதோ உணர்ச்சிகொண்டு வந்தாலும் தமக்கு ஆதரவில்லாதிருப்பது போல் காணும் பக்ஷத்தில் உடனே பின்னிட்டுக் கொள்ளும் நிலைமையிலிருந்து வருகிறார்கள்.

இப்போது உயர்ந்த ஜாதிக்காரர்கள் அவர்களை விரும்பியழைக்காத தன்மையில் தானிருக்கிறார்களெனக் கூறலாம். இவ்வியக்கத்தில் ஈடுகொண்ட முறைக்காக அவர்கள் வாக்கமட்டும் ஆதரவு காட்டிக்கொள்கிறார்களே யொழிய உள்ளுணர்ச்சியுடன் அவர்களைத் தம்பக்கத்திற்கு வலுவில் இழுத்தபாடேயில்லை. தமக்கு மேலாயுள்ள பிராமணர் கொட்டமொடுக்கும் வேலையென்றால் வெகு பிரீதி கொள்கிறார்கள். இதனால் தெரிவதென்ன? சுயநலப்பிரியர்கள் என்றாகுதன்றோ? பிராமணரல்லாதார் இயக்கத்தின் நோக்கம்தானென்ன? சகோதரத்துவம், சமத்துவம், சுயமரியாதை நிலவவேண்டுமென்பதல்லவா?

ஆனால் பிராமணரல்லா உயர்ஜாதிகள் பஞ்சமர்களை ஒதுக்கி நின்று வேலை செய்து வருகிறார்களென்று சொல்ல வரவில்லை. அவர்களை வெறுத்துவிட்டார்கள் என்றும் சொல்வதற்கில்லை. தாமரை யிலையில் நீர்போன்ற தன்மையில் உளர் என்றுமட்டும் கூறுகிறோம். இப்படியே காலஞ்சென்று விடக் கூடாதென்பதுதான் எமது விருப்பம். இப்படியே சென்றுவிட்டால் நம்பிராமணரல்லாரியக்கம் முற்றுப்பெற்ற தொன்றாயிருக்கும் என்பது சந்தேகம். அவர்கள் பால் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிராமணரல்லார் எல்லோரும் சமத்துவம் என்னும் ஒரு குறிப்பிட்ட விடத்திற்குப் புறப்பட்டு நடைகொண்டிருக்கும்போது அவர்களில் ஒரு பெரும் பகுதியினர் பிரயாணப் பட்டும் படாமலுமிருந்தால் அக்குறிப்பிட்ட விடத்திற்கு எல்லோரும் ஒருங்கேபோய்ச் சேர்வதெப்படி? எல்லாரும் அவ்விடத்திற்குப் போய்ச் சேர்தல் தானே நம் நோக்கம் பூர்த்தியானதாகும். அதற்கு யாம் செய்யவேண்டியதென்ன? புகைவண்டியின் இஞ்ஜினே போன்று பின்னிட்டிருப்பவர்களை முன்னால் இழுத்துச் செல்லவேண்டியதுதான்.

பின்னிட்டிருக்கும் பஞ்சமர்களுக்கு அடிமைச்சேறு ஒட்டிக்கொண்டுதானிருக்கிறது. ஏன்? பழைய பயம்! அவர்களை அப்பயத்தினின்றும் விடுவித்து நம்முன் சேர்த்துக்கொள்ளவேண்டும். பயம் நீக்க அவர்களுக்குள் உணர்ச்சி யெழுப்ப வேண்டும். இதற்கு அவர்கள் உள்ள இடங்களிலெல்லாம் தக்க பிரசாரம் நடத்தவேண்டும். பிரசங்கவாயிலாலும், பிரசுர வாயிலாலும் அவர்களுக்குச் சுத்த ரத்தம் ஓடச் செய்யவேண்டும். மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை யென்பதை அவர்களுணரும்படி செய்யவேண்டும். அவர்களைத் தீண்டிக்கொள்ளுதல், அவர்களுக்கு சமஇருக்கை தருதல், அவர்களுடன் சமபந்திபோஜனம் செய்தல் முதலிய வகைகளில் முனைந்து வேலை செய்ய வேண்டும். அப்போது தான் நம்மியக்கத்தின் உண்மையும் ஒரு தலைப்பக்ஷமின்மையும் தெரியலாகும். இவ்வேலை தான் இவ்வியக்கத்தின் முக்கியமான தொன்றாகும். சமத்துவம் தழைத்தோங்க இதுவே வழி.

இவ்வியக்கம் ஆரம்பமான முதல் பிராமணச் சூழ்ச்சிகளைத் தகர்த்தோம். தகர்த்துத்தவிடு பொடியுமாக்கிவிட்டோம். இப்போது எங்கும் சுயமரியாதை உணர்ச்சி பொங்கி நிற்கிறது. இனியும் பிராமணர்களைத் தாக்க வேண்டுமென்பது அவசியமில்லை. எனினும் அதுவும் ஒரு பக்கம் நடக்கட்டும். முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது பஞ்சமர்களை நம்பக்கம் சேர்த்துக்கொள்ள வேண்டுவதே. உயர்ந்தோரைத் தமக்குச் சமமாக்கச் செய்யும் வேலையிலுள்ள ஆர்வ மவ்வளவு தாழ்ந்தோரைத் தமக்குச் சமமாக்கச் செய்யும் வேலையில் காணமுடியாதது சகஜம். ஆனால் பெருந்தன்மை கொண்டார்க்கு வேற்றுமை தெரியாது. அப்பேர்ப் பட்டவர்களினால் தான் இவ்வியக்கம் ஏற்பட்டதுமாகும். ஆகையால் காரிய சித்தி கைகூடும் என்பதே எமது நம்பிக்கை. இது பரியந்தமும் பஞ்சமரிடை பிரசாரம் பலமாய் நடைபெறக் காணோமாகையால் இது தூண்டுதல் செய்யவேண்டுவதாயிற்று. தலைவர்களும் மற்றும் இவ்வியக்க அபிமானிகளும் கவனம் செலுத்துவார்களாக.

தாழ்ந்த வகுப்பினரென ஒதுக்கப்பட்டவர்களிடம் சமத்துவம் கொண்டாட உயர்ந்தோர்களென்பவர்கள் தயங்கக்கூடாது. நமக்குத் தாழ்ந்தவரும் வேண்டாம்; உயர்ந்தவரும் வேண்டாம்; எல்லோரும் சமமாயிருப்போம். மனிதரில் ஒருவருக்கொருவர் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடில்லையென்ற தத்துவம் ஒவ்வொருவர் மனதிலும் என்ஞான்றும் நிலவட்டும்.

இது சம்பந்தமாய் பஞ்சமர்களுக்கும் ஈண்டொரு வார்த்தை தருகிறோம். பஞ்சமர்கள் தாழ்ந்தவர்களெனப் பல் காலமாகத் தள்ளப்பட்டுவந்தவர்கள். இவ்வசம் பாவிதம் பிராமணர்கள் மூலமாய் ஏற்பட்டு பிராமணரல்லா ஏனைய சாதியார்களும் கைக்கொண்டார்கள். இவ்வநியாயம் இனி நிலைகொள்ளாது. எங்கும் சமத்துவப் பேச்சு ஒலிக்கின்றது. தாழ்த்தப்பட்டவர் பால் இறைவன் அருள் சுரக்கிறார். காந்தியடிகளைத் தந்திருக்கிறார். அடிகள் கருத்துக் கிசைய அறிவாளிகளும் தோன்றியிருக்கின்றனர். நியாயம் ஓங்கப்போகிறது. பஞ்சமர்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. காந்தி காலத்தில் கதிமோக்ஷம் கிடைக்கப்போகிறது. ஆகையால் பஞ்சமர்கள் முன்போல் பயந்துகிடக்க வேண்டியதில்லை. அவர்கள் சமத்துவத்திற்குப் போராட தைரியம் கொள்ளவேண்டும். அவர்களுக்கு அனுதாபமாக வேலை நடப்பினும் அவர்களும் முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் தம்மிடையே உணர்ச்சி யெழுப்பிக்கொள்ள வேண்டும். இப்போது அவர்கள் உயர்ந்தாரென்பார் சமத்துவத்திற்கிழுப்பினும் பெரும்பாலும் ஒதுங்கிக்கொள்ளவேசெய்கிறார்கள். தருணம்வாய்க்கும் போது தை நழுவ விட்டுவிடக்கூடாது. சமீபத்தில் சென்னையில் ஒரு ஆதிதிராவிடப் பெண் ஆலயம் புகுந்து வெற்றி பெற்றதை மறந்துவிடக்கூடாது. பஞ்சமர்கள் முயற்சி பலிதமாவதற்குச் சாதனமில்லாம லில்லை. அவர்கள் தம்மகத்துள் உணர்ச்சி யற்றிருந்தால் பிறர் அனுதாபத்தில் பிரயோசனமில்லை. ஆகையால் பிறர் அனுதாபத்திற் கிலக்காய் தமது குறைகளை நீக்கப் பாடு கொண்டு வந்தால் எல்லாம் நலமாய் முடியும். உயர்ந்தோர் தேடிப்போயும், தாழ்ந்தோர் நாடி வந்தும் சகோதர பான்மை யுண்டாக்கி நம் நாட்டை கண்ணியப் படுத்துவார்களாகவும்.

ஓர் சமரஸன்.

## செய்தித் திரட்டு.

அருப்புக்கோட்டையில் சென்ற 27-3-28ல் பிற்பகல் சுமார் 5-மணிக்கு ஓர் கிறிஸ்தவ வாலிபனை ஒரு மகமதியர் ஏதுகாரணத்தைமுன்னிட்டோ முகமதியர் கடைவீதியில் விட்டு கத்தியால் கழுத்தில் குத்தித்தள்ளிவிட்டார். அவ்வமயம் ஏராளமான ஜனங்களிருந்தும் தடுத்தாரில்லை. ஆஸ்பத்திரிக்கெடுத்துச் சென்றதில் கொஞ்ச நேரத்திற்குள் உயிர்போய்விட்டது. குத்தினவரைப் பிடிப்பதற்குப் போலீஸார் முயற்சி யெடுத்து வருகிறார்கள்.

*　　*

அருப்புக் கோட்டைக்குத் தெற்கே 8 மைல் தூரத்திலுள்ள பந்தல்குடி யெனும் ஊரில் சங்கையநாடார்என்பவர் தான்புதிதாகவாங்கிவந்த ஒரு செம்மறிக்கடாவை ஒரு இறங்கு கிணற்றில் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்போது அக்கடா அவரை ஆழத்தண்ணீருக்குள் இழுத்துச் சென்றுவிட நீந்தத் தெரியாக்குறையால் உயிர் நீத்தார்.

*　　*

ரங்கூனைச் சேர்ந்த பூந்தட்டான் எனும் இடத்திலுள்ள ஸ்டீல் பிரதர்ஸ் கம்பெனி பர்மிய குமஸ்தாக்கள் சுமார் 40 பேர்கள் இரண்டுமோட்டார் பஸ்களில் ஏறி வன போஜனார்த்தமாகப் புரோம் நகருக்குமுன்னும் பின்னுமாகப் போய்க்கொண்டிருக்கும்போது புறப்பட்டவிடத்திலிருந்து 60 மைல் தூரத்தில் காலை சுமார் 2-மணிக்கு இருள் சூழ்ந்திருந்த சமயத்தில் ஒரு ரயில்வே ரோடைக் கடக்கவேண்டியிருந்தது. அது சமயம் தற்செயலாக ஒருரயில்வே இஞ்ஜினும் வந்துகொண்டிருந்தது. கேட் கீப்பர் அஜாக்கிரதையினால் கதவு பூட்டப்படாதிருந்ததனால் முன்னால் வந்த மோட்டார் ரயில்வே ரோடைக் கடக்குந் தருவாயில் இஞ்ஜின் வந்து மோட்டாரில் தாக்கி துகள் துகளாக்கி விட்டது. 3 பேர் தண்டவாளத்தில் விழுந்து நசுக்குண்டு இறந்தனர். 9 பேருக்குப் பலத்த காயம்.

*　　*

ருஷிய ராணி மேரி அம்மையார் ஒரு சோப்புத் தொழிற்சாலை யேற்படுத்தி தானே அதற்கு மானேஜிங் டைரக்டராயிருந்து நடத்தி வருகிறார்.

*　　*

பால்ய விவாகக் கொடுமையை ஒழிக்கச் சட்டமியற்ற வேண்டுமென்று சென்னை சட்ட சபையில் டாக்டர். முத்துலக்ஷ்மி அம்மையார் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறிவிட்டது.

*　　*

தென்னிந்திய ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களின் தீவிர வேலையினால் திருவாங்கூர் சமஸ்தானத்தில் பூங்கன்னமென்ற ஊரில் புலைய சமூகத்தினின்றும் கிறிஸ்தவர்களான 40 குடும்பங்களும், ஏற்கனவே கிறிஸ்துவர்களாயிருந்த 6 குடும்பங்களும், திருவாங்கூர் தென்பாகத்தில் 30 கிறிஸ்தவக் குடும்பங்களும் இந்துக்களாய் மாறி விட்டனர்.

*　　*

கனம். ஸர். அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் ஒரு சர்வ கலா சாலை கட்டுவதற்கு 20 லட்ச ரூபாயும் ஷையூர் ஸ்ரீ மீனாக்ஷி காலேஜின் சொத்துக்களையும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்.

*　　*

மதுரை ஸ்ரீமான் எம். சுப்பிரமணிய முதலியாரவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து, மதுரை, "தமிழ் நாடு வாலிப சங்க"த்தார் துக்கமடைந்து அவர்களது அனுதாபத்தை முதலியாரவர்களின் குடும்பத்தார்க்கும், ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்களுக்கும் காட்டியிருக்கிறார்கள்.

*　　*

ஆப்கன் அமீர் லண்டன் நகரத்து ஏழை ஜனங்களுக்கு 1000 பவுன்கள் தர்மமளித்திருக்கிறார்.

*　　*

ஐக்கிய மாகாணத்தில் ஒரு வாரத்தில் பிளேக் நோயால் 4630 பேர் மாண்டிருக்கின்றனர்.

*　　*

சென்னை சட்டசபையில் போலீசாருக்கு உடை சப்ளை செய்வதில் கதராடையைச் சப்ளை செய்யவேண்டுமென்று ஸ்ரீ பக்தவத்சலு நாயுடு அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பெற்றது.

*　　*

அருப்புக்கோட்டை சுகாதார வாரக் கொண்டாட்டத்தில் ருத்திரன் பாடக் கூடாதென்றதினாலுண்டான வழக்கில் 21-3-28ல் ஏற்பட்டவாய்தா மறுபடியும் அடுத்தமாதத்திற்கு விசாரணையை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

*　　*

இங்கிலாந்தில் ஆப்கன் அரசர் அமனுல்லாவின் பிரயாண விபரத்தை சினிமாவில் படமெடுக்க, அன்னியநாட்டு மந்திரிகள் ஏற்பாடு செய்திருக்கின்றனர்களாம்.

*　　*

சைமன் கமிஷன் அங்கத்தினர்கள் டில்லியிலிருந்து 30௳ புறப்பட்டு 31௳ பம்பாயில் இங்கிலாந்துக்குக் கப்பலேறி விட்டார்கள்.

*　　*

லார்டு பர்க்கென் ஹெட்டிற்கு சுரம் கண்டிருந்தது குணமடைந்து வருகிறது. சில தினங்களுக்குத் தமது அலுவல்களை யெல்லாம் ஒதுக்கிவைத்திருக்கிறாராம்.

*　　*

ஸ்ரீ ரங்கம் திருக்கச்சி நம்பியாழ்வார் கோவிலில், ஏ. கே. கிருஷ்ணசாமிஐயங்காருக்கும் ஸ்ரீமதி ரங்கநாயகியம்மாளுக்கும், பரிசாரக ஆராதனை கைங்கரிய வகையில் ஏற்பட்ட தகாறு காரணமாக 14-3-28 முதல் கதவைப் பூட்டிவைத்திருப்பதாகத் தெரிகிறது.

*　　*

திருச்சி தாலுகா போர்டு ஆதரவிலுள்ள பள்ளிக்கூடங்களில் ராட்டினத்தில் நூல் நூற்பதைக் கற்றுக்கொடுக்க ஒரு ஆசிரியரை திருச்சி தாலுகா போர்டில் நியமித்திருக்கின்றார்களாம்.

*　　*

இங்கிலாந்திலிருந்து ஒரே பாய்ச்சலில் அமெரிக்கா சென்ற காப்டன் ஹிங்கிளேர் என்பவருக்கு 2000 பவுன் பரிசளிக்கப்பட்டதாம்.

*　　*

குடி வகைகள் அருந்திவிட்டோ அல்லது குடிவெறியுடனோ எவரும் மோட்டார் வண்டி ஓட்டக்கூடாதென மைசூர் அரசாங்கத்தார் ஓர் சட்டம் பிறப்பித்திருக்கின்றனர்.

*　　*

கல்கத்தாவிலும் அதற்குப் பக்கத்து ஜில்லாக்களிலும் சிலர் 100 ரூபாய், 5 ரூபாய் கள்ள நோட்டுகளாக லக்ஷ ரூபாய்க்கு அச்சிட்டுவிட்டதாக ரகசியப் போலீஸார் எழுவரைக் கைது செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

*　　*

பம்பாய் சமாஜ சாமச சங்கத்தார் சுமார் ஆயிரர் பஞ்சமர்களுக்குப் பூணூல் போட்டுப் பிராமணர்களாக்கினர். சமூக மத விஷயங்களில் பிராமணர்களோடு பஞ்சமர்களுக்கும் சம சுதந்திரமும் உரிமையுமிருக்க வேண்டுவதே அச்சமாஜத்தாரின் முக்கிய நோக்கமாகும்.

## திருத்தம்.

சென்ற 27-2-28-லும், 5-3-28-லும் வெளியீடான நம்மித்திரன் சஞ்சிகைகளில் 6-ம் பக்கத்தில் "நோட்டீஸ்" எனும் தலைப்புடன் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தில் 5-வது வரியில் ஙா. சி. என்று விலாசம் இட்டிருப்பதை ந. சி. என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் பாங்கு, லிமிட்டெட், தூத்துக்குடி.

1927-ம்ஷூ டிசம்பர் மீ 31 உயிலிருந்தபடி
வரவு செலவு ஐந்தொகைச் சிட்டை.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம். | | | | | | |
| ரிஜிஸ்தர் ஆனது | | | | | | |
| பங்கு 1-க்கு 10 ரூபாயுள்ள 200000 பங்குகள் ... | 20,00,000 | 0 | 0 | | | |
| வெளியிடப்பட்டதும் கையொப்பம் செய்யப்பட்டதும். | | | | | | |
| பங்கு 1-க்கு 10 ரூபாயுள்ள 45991 பங்குகள் ... | 459910 | 0 | 0 | | | |
| வசூலானது. | | | | | | |
| பங்கு 1-க்கு 5 ரூபாயுள்ள 45350 பங்குகள் ... | 226750 | 0 | 0 | | | |
| வசூலாகாத வரய்தாத் தொகை... | 5312 | 8 | 0 | | | |
| இழக்கப்பட்ட பங்குகளின் ... | 221437 | 8 | 0 | | | |
| தொகைகளைக் கூட்டிக ... | 1602 | 8 | 0 | 223040 | 0 | 0 |
| வாய்தாவுக்காக முன் பணமாகச் செலுத்திய தொகை | | | | 4415 | 2 | 11 |
| போனவருஷக் கணக்குப்படி க்ஷேமநிதி ... | 3000 | 0 | 0 | | | |
| இழக்கப்பட்ட பங்குகளுக்கு கொடுபடாத ஆதாயம் ... | 624 | 12 | 6 | 3624 | 12 | 6 |
| பங்குகளின் பேரில் பிரிமியம். | | | | 78 | 8 | 0 |
| டிபாசிட்டுகள். | | | | | | |
| பிக்சட், கரன்ட், சேவிங்க்ஸ் பாங்கு, செக்யூரிட்டி டிபாசிட் | | | | 142307 | 0 | 11 |
| கொடுபடாத ஆதாயம். | | | | 3850 | 5 | 5 |
| செல்லுகள். | | | | | | |
| செலவுக்காக .... | 1428 | 15 | 0 | | | |
| மற்றவகைக்காக ... | 1852 | 10 | 9 | 3281 | 9 | 9 |
| லாபநஷ்டம். | | | | | | |
| 1926-ம் ஷூ டிசம்பர் மீ 31 உயிலிருந்தபடி ஐந்தொகை சிட்டையில் லாபம். ... | 11739 | 5 | 2 | | | |
| பங்காளிகளுக்கு 100-க்கு 5¼ வீதம் கொடுத்த ஆதாயம் ரூ. 11436-10-0 | | | | | | |
| சுத்தலாபத்தில் டைரக்டர்களுக்கு 100-க்கு 2 வீதம் செலுத்திய கமிஷன் ... ரூ. 233-0-0 ... | 11669 | 10 | 0 | | | |
| | 69 | 11 | 2 | | | |
| நாளது வருஷத்தில் சுத்தலாபம்... | 19261 | 15 | 5 | 19331 | 10 | 7 |
| ஆக ரூ. ... | | | | 399929 | 2 | 1 |
| ரொக்கமும் மற்றத் தொகைகளும் கையிருப்பு ... | 1759 | 1 | 10 | | | |
| இதர பாங்குகளில் இருப்பு ... | 163442 | 8 | 9 | 165201 | 10 | 7 |
| முன் பணத்தொகை வரக் கூடியது. | | | | 257 | 6 | 0 |
| கடன் தொகைகள். | | | | | | |
| சரக்குகளின் பேரில் ஈடுகாட்டப்பட்டு வசூலாகக்கூடியது ... | 49396 | 3 | 0 | | | |
| புள்ளிகளுக்கு ஜாமீன் பேரில் கொடுக்கப்பட்டு வசூலாகக் கூடியது ... | 184010 | 12 | 5 | 233406 | 15 | 5 |
| ஷரா:(1)டைரக்டர்களுக்கு ஜாமீன் பேரில் கொடுக்கப்பட்டு வசூலாகக்கூடியது ரூ. 10975-14-11 | | | | | | |
| 2. மற்ற ஆபீஸர்களிடமிருந்து வரவேண்டியது—Nil. | | | | | | |
| ஆபீஸ் சாமான். | | | | | | |
| மூலக்கிரயம் ... | 1932 | 4 | 3 | | | |
| 1927-ஷூ டிசம்பர் மீ 31உ முடிய சேதாரம் கழித்தது. ... | 869 | 2 | 2 | 1063 | 2 | 1 |
| ஆக ரூ. ... | | | | 399929 | 2 | 1 |

## 1927-ம் ஷூ டிசம்பர் மீ 31 உ முடியவுள்ள லாப நஷ்டக் கணக்கு.

பற்று விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| TO டிபாசிட்டுகளுக்குரிய வட்டி ... ... | 6090 | 13 | 0 |
| ,, சம்பளம் ... ... | 4590 | 0 | 0 |
| ,, ஆடிட்டர் பீஸ் ... ... | 75 | 0 | 0 |
| ,, வக்கீல் பீஸ் ... ... | 100 | 0 | 0 |
| ,, அச்சுக்கூலி வகையரு ... ... | 183 | 9 | 9 |
| ,, தபால், தந்தி செலவு ... ... | 170 | 8 | 0 |
| ,, டெலிபோன் ... ... | 150 | 0 | 0 |
| ,, ஸ்டாம்பு, பைலிங் பீஸ் ... ... | 23 | 8 | 0 |
| ,, பிரயாணச் செலவு ... ... | 37 | 4 | 0 |
| ,, வாடகை ... ... | 250 | 0 | 0 |
| ,, வரி (வருமானவரி சேர்த்து) ... ... | 1453 | 15 | 0 |
| ,, பிரசுரச் செலவும் மற்றும் செலவுகளும்... ... | 298 | 10 | 6 |
| ,, ஆபீஸ் சாமான் சேதாரம் ... ... | 118 | 2 | 0 |
| ,, சுத்த லாபம் ... ... | 19261 | 15 | 5 |
| ஆக ரூ. ... | 32753 | 6 | 8 |

வரவு விபரம்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| By கடன் தொகை வட்டி ... ... | 31635 | 7 | 0 |
| ,, டிபாசிட் வட்டி ... ... | 435 | 12 | 5 |
| ,, கமிஷன், பீஸ், மற்றும் வருமானங்கள் ... | 682 | 3 | 3 |
| ஆக ரூ. ... | 32753 | 6 | 8 |

காலஞ் சென்ற திருவாளர்.

## பெ. திருமேனி நாத நாடாரவர்கள்.

## அனுதாபக் கூட்டங்கள்.

### அருப்புக்கோட்டை பொதுஜன ஊழியர்கள்

பிரபல குடும்ப வழி வந்தவரும், பிரமச்சரியம் அனுஷ்டித்து வந்தவரும், நாடார் குலத்தவருக்கும், நம் நாட்டுக்கும் அரிய சேவை புரிந்து வந்த இள வீரரும், காந்தி வழி நின்று சாந்த மூர்த்தியா யிலங்கிய வரும், சுதாபிமானியும், தீண்டாமைக் கண்டனரும், திட சத்தியாக்கிரகியும், ஜீவ காருண்யரும், மற்றும் போற்றக் குரிய புனித மார்க்கங்களி லீடு கொண்ட வருமாகிய திருவாளர். பெ. திருமேனி நாத நாடாரவர்களின் அகால மரணத்தைக் குறித்து யாம் மிகுந்த துக்கப் பட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தாருக்கும், மற்றும் சகாக்களுக்கும் ஆறுத லளித்து அவரது ஆன்மா சாந்தி யடையச் செய்ய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஃ ஃ

### நாடார் மகாஜன சங்கம், மதுரை.

நமது நாடார் மஹாஜன சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்காகத் தீவிரமாக உழைத்துவந்தவரும், நாடார் வாலிபர்களுக்குள் ஓர் புதிய உணர்ச்சியை யுண்டாக்கி அவர்களை சமூக முன்னேற்றத்தில் ஈடுபடச் செய்த வாலிப வீரரும், நீண்ட காலம் "நாடார் குல மித்திரன்" மானேஜர் பதவியை ஏற்று ஜாதீய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வந்தவருமான அருப்புக்கோட்டை ஸ்ரீமான் பெ. திருமேனிநாத நாடார் அவர்கள் 23-3-28-ல் அகால மரணமடைந்தமை குறித்துப் பெரிதும் விசனிக்கிறோம். அவரது பிரிவால் வருந்தும் அவரது சகாக்களுக்கும் நாடார் குல வாலிபர்களுக்கும் குடும்பத்தார்களுக்கும் ஆறுதல் அளிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஃ ஃ

### வாலிப நாடார் சங்கம், மதுரை.

நாடார் சமூக முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட் டுழைத்தவரும், "நாடார் குல மித்திரன்" மானேஜர் பதவியிலிருந்து அருந் தொண்டு புரிந்து வந்தவரும், தேசத்தில் சகோதர வாஞ்சை நிறைந்து நிற்பான் வேண்டி வைக்கம் சத்தியாக்கிரக இயக்கத்திலீடுபட் டுழைத்த வீரரும், வாலிப நாடார்களுக்குள் புத்துணர்ச்சியை உண்டாக்கி வைத்த புண்ணிய சீலரும், பொது ஜன ஊழியமே தனது கடமையாகக் கொண்டவருமான அருப்புக்கோட்டை ஸ்ரீமான் பெ. திருமேனி நாத நாடார் அவர்கள், 23—3—28-ல் விண்ணுலக மடைந்தமைக்கு மிகவும் வருந்தி அவரது ஆத்மா சாந்த நிலையடையும்படியும், அவரது சகாக்களுக்கும், குடும்பத்தார்களுக்கும் ஆறுத லளிக்கும்படியும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

ஃ ஃ

### அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையார்.

எங்கும் அன்பு மயம் தங்க வேண்டுமென்று தவம் கிடந்தவரும், நமது ஜீவகாருண்யசபை ஆக்கி அதன் நோக்கம் பரப்பியவரும், காந்தி வழி பற்றி தீண்டாமை விலக்கு, கதர் அபிவிர்த்தி முதலிய புனித வியக்கங்களில் அரும்பாடு கொண்டு வந்தவரும், குலத்திற்கும், தேசத்திற்கும் வேண்டும் வேலையாண்டும் செய்து வந்தவரும், பிரபஞ்ச மாயை கனன்று புறத் தோற்றவழ கொழித்து பிரமச்சரியம் பூண் டொழுகியவருமான திருவாளர். பெ. திருமேனி நாத நாடாரவர்கள் அகால மரண மெய்தியது குறித்து மிகவும் துக்கமடைதலுடன் அவரது பிரிவாற்றாமையால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், அவரது சகாக்களுக்கும் ஆறுதலளித்து அவரது ஆன்மா சாந்தியடையக் கிருபாலிக்கக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

## கவனிப்பு.

147-வது ஆர்ட்டிக்கிளின்படி ஐந்து வருஷகாலத்திற்கு டிவிடண்டு பங்காளியால் கேட்கப்படாமல் இருந்தால் மேற்படி தொகையை டைரக்டர்கள் ரிசர்வ் பண்டு கணக்கில் வரவு வைத்துக்கொள்ளலாம். ஆகையால் டிவிடண்டு வாரண்டை கையெழுத்துச்செய்து பாங்குக்கு அனுப்பி பணத்தை விரைவில் வைத்துக் கொள்ளவாவது அனுப்பிவைக்கவாவது உடனே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியது.

சேர் சர்ட்டிபிக்கட்டை இன்னும் வாங்கிக் கொள்ளாதவர்கள் ரசீதுகளையும் தபால் செலவையும் அனுப்பி சர்ட்டி பிக்கட்டைப் பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

N. P. I.

## டைரக்டர்கள் பங்காளிகளுக்கு அனுப்பும் ரிப்போர்ட்டு.

1927-ம்ஷூ டிசம்பர் மீ 31உ முடியவுள்ள ஐந்தொகைச் சிட்டை, லாப நஷ்டக்கணக்கு, ஆடிட்டர் கணக்குகளைப் பரிசோதித்த சர்ட்டிபிக்கட் இவைகளை இத்துடன் அனுப்பியிருக்கிறோம்.

இந்தக்கணக்கில் சகல செலவுகளும் கழித்ததுபோக
சுத்த லாபம்... ... ... ...ரூ. 19261—15—5
முந்தின வருஷத்திலிருந்து கையிருப்புக்குக் கொண்டுவந்த லாபம் ரூ. 69-11-2
ரூ. 19331-10-7

இந்தத்தொகையை பின்வருமாறு பங்கிட டைரக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

1. 1926-ம்ஷூ டிசம்பர் மீ 31உவரை அலாட் செய்யப்பட்டபங்குகளுக்கு முழுவருஷத்திற்கும் 1927-ம்ஷூ அலாட் செய்யப்பட்ட பங்குகளுக்கு பங்குகள் அலாட் செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதமுதல் 1927-ம்ஷூ டிசம்பர் மீ 31உவரை ஏற்பட்ட காலத்திற்கு வருமானவரி அல்லாது வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ரூ. 8—8—0 வீதம் ஆதாயம் கொடுக்க ... ... ரூ. 18716--8--0
2. 111-வது சட்டத்தில் சொல்லிய பிரகாரம் வருஷ சுத்தலாபத்தில் நூற்றுக்கு ரூபாய் இரண்டு வீதம் டைரக்டர்களுக்கு கமிஷன் ரூ. 385—4—0
3. அடுத்த வருஷத்திற்கு கொண்டுபோகும் மீதி ரூ. 229-14—7

ரூ. 19331-10—7

பங்காளிகள் வியாபாரிகள் இவர்களுடைய சௌகரியத்திற்காக சென்ற பெப்ருவரி மாசம் 5-ம் தேதி முதல் விருதுநகரில் நமது பாங்கின் பிராஞ்சு ஒன்று திறக்கப்பட்டிருக்கிறதென்றும், அங்கு சகலவிதமான பாங்கு நடபடிக்கைகளும் நடைபெறுகின்றன என்றும் டைரக்டர்கள் சந்தோஷத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

(ஒப்பம்) டைரக்டர்கள் (ஒப்பம்)

| | |
|---|---|
| அரி. அ. சு. ஆறுமுகசாமி நாடார் | க. அ. மா. அ. காளியப்ப நாடார் |
| அ. மா. ம. சின்னமணி | அரி. அ. சேண்பக நாடார் |
| தோ. ம. மு. சங்கரலிங்க நாடார் | ஞா. அ. சு. சண்முக நாடார் |
| தோ. ம. ச மதனை நாடார் | மோ. சி. ஆ. சிதம்பர நாடார் |
| ப. கோ. ச. அ. ஆறுமுகநாடார் | |

(ஒப்பம்) என். பி. ஐசக்—ஏஜெண்ட்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## முத்துப் பதக்கம்.

பிரபஞ்ச மாயையினின்றும் விடுபட்டு சோதியிற் கலந்துகொள்ள விரும்பும் ஆத்மார்த்த ஞானிக்குத் தனது உயிர் ஓர் இன்ப வீட்டடைக்குத் தாளாகத்தோற்றும்.

* *

ஒருவர் தன்னகத்து எத்தனை குற்றங்களைப் பொதிந்து வைத்திருப்பினும், பிறர் குற்றங்கூறுவதில் பின் வாங்குவதில்லை. இவர் குற்றம்பற்றித் தீர்வைக்கும் போது விழிக்கிறார்.

* *

ஒருவர் நம் மீது எவ்வளவு பகைமை பூண்டிருந்தாலும் நம் களங்கமற்ற தன்மையால் அவரை வயப்படுத்திவிடலாம்.

* *

எதிர்பாராததோர் அபாண்டமான பழி சுமத்தப்படுவது தலையில் இடி விழுந்ததே போலாம்.

* *

ஒருவரை யெதிர்பார்த்துக் காரியம் செய்பவர்களெல்லாம் கடன்கால்களால் நடை கொள்ளுபவர்களேயாவர்.

* *

உலகமெல்லாம் ஒருப்போக்காக ஒரு தவறானவழியில் சென்றாலும் நம்மனோர்மை யொப்ப என்ன இடுக்கண்களையும் பொருட்படுத்தாது நியாயவழி செல்வதே வீரத்தைக் குறிக்கும்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

மித்திரன். எப்படியோ, 1894-ம் ஆண்டு மே மாதத்தில் நேட்டால் இந்தியக் காங்கிரஸ் தோன்றிற்று. நேட்டால் காங்கிரஸுக்கும் இந்தியக் காங்கிரஸுக்கும் இருந்த ஒரு வித்தியாசம் யாதெனில் நேட்டால் காங்கிரஸ் வருஷமுழுவதும் வேலை செய்ததேயாகும். வருஷத்திற்குக் குறைந்தது 3பவுன் சந்தா கொடுத்தவர்களே அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். அதற்கு மேற்பட்ட தொகைகள் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஒவ்வோர் அங்கத்தினரிடமிருந்து அவரால் கூடுமான பெரிய தொகை பெற முயலப்பட்டது. வருஷம் 25 பவுன் கொடுத்த அங்கத்தினர் ஐந்தாறுபேர் இருந்தனர். 12 பவுன் சந்தா கொடுத்தவர் பலர் இருந்தனர். ஒரு மாதத்தில் 300 அங்கத்தினர் சேர்க்கப்பட்டார்கள். அவர்களில், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லா மதத்தாரும், நேட்டாலில் எத்தனை இந்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தார்களோ அத்தனை மாகாண வாசிகளும் இருந்தார்கள். முதல் ஆண்டுமுழுதும் வேலை தீவிரமாக நடைபெற்றது. பணக்கார வியாபாரிகள் தங்கள் சொந்த வண்டிகளில் தூர தூரங்களிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் சென்று, புதிய அங்கத்தினர்களும், சந்தாக்களும் சேர்த்து வந்தார்கள். எல்லாரும் கேட்டவுடன் பணங்கொடுத்துவிடவில்லை. சிலருக்கு உருவேற்ற வேண்டியிருந்தது. இதுவே ஒருவகை அரசியல் பயிற்சியாயிற்று. ஜனங்கள் உள்ள நிலைமை இன்னதென்பதை நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. மாதமொரு முறை காங்கிரஸ் கூடிற்று. அப்போது விவரமான கணக்குகள் ஒப்புவிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றன. அவ்வப்போதைய நிகழ்ச்சிகள் எடுத்துக் கூறப்பட்டு நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டன. அங்கத்தினர் பற்பல கேள்விகள் கேட்டார்கள். புதிய விஷயங்கள் யோசிக்கப்பட்டன. இவை யெல்லாவற்றின் பயனாக, இதற்கு முன் கூட்டத்தில் பேசியே யறியாதவர்களும் பேசிப் பழக்கம் செய்து கொண்டனர். பேச்சு ஒழுங்கு முறையுடன் இருக்கவேண்டுமென ஏற்படுத்தினோம். இவை யெல்லாம் புதிய அநுபவம் அல்லவா? இந்திய சமூகத்தார் பெரிதும் ஊக்கங்கொள்ளலாயினர். இதற்கிடையில், வாக்குரிமையைப் பறிக்கும் மசோதாவை லார்டு ரிப்பன் நிராகரித்துவிட்டார் என்னும் நல்ல செய்தி வந்தது. இதுவே அவர்களுடைய ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும் இருமடங்காக்கிற்று.

---

## நாடார் பரிபாலன சங்கம், செண்டூல், கோலாலம்பூர்.

### 1927-ம் வருஷ அறிக்கை.

#### சங்கத்தின் நிலைமை.

வருஷ ஆரம்பத்தில் 306 அங்கத்தினர்களிருந்தார்கள். புதிதாக சேர்ந்தவர்கள் 19; இறந்தவர்கள் 2; தற்சமயம் உள்ளவர்கள் 323; இவர்களில் கோலாலம்பூரிலுள்ளவர்கள் 124; வெளியூரிலுள்ளவர்கள் 199.

#### நிர்வாகசபைக்கூட்டம்.

சபாநாயகர்—சி. சாமுவேல் நாடார் அவர்கள், உபசபாநாயகர்—வே. பொன்னுசாமி நாடார் அவர்கள், (மூவார்), காரியதரிசிகள்—ஜெ. எம். பாக்கியநாத நாடார் அவர்கள் (7 மாதம்.) அ. வேதமுத்து நாடார் அவர்கள் (2 மாதம்) பொக்கிஷதார்-அ. மகாலிங்க மூர்த்தி நாடார் அவர்கள்.

நிர்வாகசபை அங்கத்தினர்கள்-ஸ்ரீமான்கள் ஜி. எஸ். டி. தாஸன் நாடார், பி. எ. எபனேசர் நாடார், ஆர். எஸ். யோசேப்பு நாடார், வி. எம். செல்லையா நாடார், ஆ. வேதமணி நாடார், இ. எ. சாமுவேல் நாடார், அ. வேதமுத்து நாடார், ஆ. வேதமணி நாடார், (உத்தியோகவிடம் மாறுதலால் எ. நவமணி நாடார் நியமிக்கப்பட்டார்).

சென்ற வருஷத்தில் காரியதரிசி ஸ்ரீமான் ஜெ. எம். பாக்கியநாத நாடார் தமது வசதிக் குறைவினிமித்தம் சங்கத்தைக் கவனிக்க முடியாமல் ராஜிநாமா செய்ததால் மூன்றுமாதம் காரியதரிசியில்லாமல் பிரசிடெண்டால் சங்கம் நடைபெற்று வந்தது. அத்துடன் பொக்கிஷதாரும் சில மாதம் உடம்பு அசௌக்கியமாயிருந்தார். ஆகையால் நிர்வாகசபைக் கூட்டம் அதிகம் நடத்த முடியாமல் ஐந்து கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றன.

#### பத்திரிகைகள்.

முன் வருஷ அறிக்கையில் காட்டியிருந்த எல்லாப்பத்திரிகைகளும் சங்கத்திற்கு வருவிக்கப்படுகின்றன.

#### பிரசாரவேலை.

பொக்கிஷதார் தனியாக பினாங்கு, அலோர்ஸ்டார், செரம்பான், தம்பின், மலாக்கா, ஜாசின், தாங்கா, மூவார், செகியோ முதலிய இடங்களுக்கு ஒரு முறை மாத்திரம் சென்று நிதி வசூலித்தும் புதிய அங்கத்தினர்கள் சேர்த்தும் வந்திருக்கிறார். பின் அவருடைய உடம்பு அசௌக்கியத்தால் மறுமுறையும் பிரயாணம் செய்யமுடியாமல் போய் விட்டது. ஆகையால் முந்தின வருஷம் போல் அதிகமாக வரக்கூடிய நிதியும், சேரக்கூடிய புதிய அங்கத்தினர்களும் குறைவாகி விட்டது.

#### தேகாப்பியாசம்.

இதுவரையில் நமது சங்கம் ஆபீசுக்கு முன்னிருக்கிற இடத்தில் பாட்மிண்டன் விளையாட்டு தினந்தோறும் நடந்து வந்தது. இவ்வருஷ ஆரம்பத்திலே அந் நிலத்தை சர்க்கார் வாங்கி விட்டபடியாலும், நமக்குத் தகுந்த வேறொரு இடம் கிடைக்காததாலும் இவ்வருஷத்தில் எவ்வித தேகாப்பியாசமும் நடத்திக்கொள்ள முடியாமல் போனது பற்றி எல்லோரும் விசனிக்கின்றோம்.

#### சொந்தக் கட்டடம்.

முன் வருஷ அறிக்கையில் காட்டிய பிரகாரம் நம்முடைய சங்கத்துக்கு அமைந்த இடங்களெல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். பின்னும் வேண்டிய முயற்சி செய்தால் சீக்கிரம் கைகூடிவரக்கூடும். தற்சமயம் நமது கையில் இருக்கப்பட்ட பண்மானது நிலத்துக்கு மாத்திரம் போதுமானதாக விருக்கிறது. தற்செயலாய் நிலம் அமைந்துவிட்டால் கட்டடம் கட்ட பணம் வேண்டியதிருப்பதால் அங்கத்தினர்களில் இதைக்கண்ணுறும் நமது நாடார்குல நண்பர்களும் தங்களால் இயன்றமட்டும் உதவிபுரிய வேண்டுமாய் தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். தங்கள் மாத வருமானத்தில் 100-க்கு 10 வீதம் தருவதாக கையொப்பமிட்ட அங்கத்தினர்கள் இன்னும்செலுத்திப் பூர்த்தி பண்ணமலிருப்பதுவும் மிகவும் வருந்தத் தக்கது. கட்டட நிதிக்காக தற்சமயம் கையிருப்பு ஷி 1606-23

#### புஸ்தகசாலை.

சென்ற வருஷ அறிக்கையில் கூறினபடி புஸ்தகசாலை திறப்புவிழா மூவார் ஸ்ரீமான் வே. பொன்னுசாமி நாடாரவர்கள் தமது சொந்த ஜோலியினிமித்தம் வரத்தடைப்பட்டபடியால் அவர்கள் உத்தரவுப்படி ஸ்ரீமான் அ. மகாலிங்க மூர்த்தி நாடாரவர்களால் சங்கீதத்துடனும், கரகோஷத்துடனும் திறந்து வைக்கப்பட்டது. இப்புஸ்தகசாலையிலுள்ள புஸ்தகங்களெல்லாம் நாள்தோறும் அங்கத்தினர்கள் குடும்ப சகிதமாய் வாசித்து சந்தோஷமடைகிறார்கள்.

#### பொக்கிஷ நிலைமை.

பிரவேசக் கட்டணம் ஷி. 19-00, சந்தா ஷி. 453-75, நன்கொடை ஷி. 59-00, செலவு ஷி. 358-00, மொத்தக் கையிருப்பு ஷி. 2230-12 (முழு விபரம் வரவு செலவு கணக்கில் பார்க்க)

#### பொது விஷயங்கள்.

(1) நமது சங்கத்தின் ஆதரவில் சகோதரி பாலம்மாள் அவர்களால் ஸ்ரீமான் தம்புசாமி பிள்ளை அவர்கள் பாடசாலையில் பெண் கல்வி என்னும் விஷயமாய்ப்பிரசங்கம்நடத்தப்பட்டது.

(2) மலாய் நாட்டு வெள்ளச் சேதநிதிக்கும் நமது சங்கம் ஷி. 58-00 வரையில் வசூல் செய்து உதவி புரிந்திருக்கிறது.

(3) மாஜி கௌரவ காரியதரிசியும் சங்கத்துக்காக ஆரம்ப முதல் ஊக்கத்துடன் உழைத்து வந்தவரும் தற்சமயம் தன் ஜெனனதேசம் சென்றிருப்பவருமாகிய ஸ்ரீமான் ஜி. எஸ். டி. தாஸன் நாடாரவர்களுக்கு இச்சங்கம் மிகவும் நன்றி செலுத்துகிறது. அன்னவர்கள் ஜெனன தேசத்திலிருந்து சுகமாய் திரும்பிவந்து மறுபடியும் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

தங்கள் ஒருமாத வருமானத்தில் 100-க்கு பத்துவீதம் வாக்களித்து சென்ற வருஷத்தில் செலுத்திய அங்கத்தினர்களின் விவரம்.

| | | ஷி-சதம் |
|---|---|---|
| ஸ்ரீமான் சி. சாமுவேல் நாடார் | செண்டூல் | 8.00 |
| ,, யோ. பிரகாசநாடார் | கோலாலம்பூர் | 2.50 |
| ,, கை. ஏசுதாஸ்நாடார் | | 3.00 |
| ,, ஆ. பெரியகருப்பநாடார் | பினாங்கு | 25.00 |
| ,, சு. வேலாயுதநாடார் | | 25.00 |
| ,, எஸ். தங்கையாநாடார் | கோலாலம்பூர் | 0.25 |
| ,, வே. வேதமுத்துநாடார் | | 5.00 |
| ,, வி. பாலையாநாடார் | செண்டூல் | 0.25 |
| ,, எம். ஜே. அருமைநாயகநாடார் | கோலாலம்பூர் | 1.75 |
| மதுரை நாடார் மகாஜன சங்கம் லாட்டரி பிரைஸ் | | 3.19 |
| | | 73.85 |
| | 1926-ம் ஷு வரவு | 30.80 |
| | ஆக மொத்தம் | 104.65 |

#### வரவு செலவு விபரம்.

| வரவு. | ஷி–சதம் |
|---|---|
| 31-12-26 முடிய இருப்பு | 443-12 |
| கட்டட நிதி வசூல் | 1606-23 |
| வட்டி வகையில் | 23-90 |
| நன் கொடையில் | 50-00 |
| சந்தாவில் | 453-75 |
| சில்லரையில் | 2-12 |
| ஆக | 2538-12 |

| செலவு. | |
|---|---|
| பொதுக்கூட்டத்திற்கு | 88-92 |
| ஸ்டேஷனரி | 24-50 |
| பத்திரிகை | 53-18 |
| எண்ணெய் | 22-78 |
| குமஸ்தா சம்பளம் | 36-00 |
| சங்கம் கட்டட வாடகை | 87-61 |
| பிரயாணம் பிரசங்க செலவு | 45-23 |
| தளவாடச்சாமான் | 19-65 |
| விளையாட்டுகளுக்கு | 28-38 |
| சில்லரையில் | 1-75 |
| ஆக | 358-00 |

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் ஷி 1066-04-ம் மெர்க்கண்டயில் பேங்கியில் ஷி 1098-23-ம் ரொக்கம் ஷி 65–85-ம் ஆக இருப்பு ஷி 2230-12.

அ. வேதமுத்து நாடார்,
கௌரவ காரியதரிசி.

---

## மதிப்புரைகள்.

### சூத்திரர்கள் யார்?

இப் பெயர் பூண்ட புஸ்தகம் ஒன்று வரப்பெற்றோம். இதின் ஆசிரியர் "திராவிடன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஜே. எஸ். கண்ணப்பரவர்களாவர். சுயமரியாதை மக்களிடை வழுத்திருக்க இவராற்றும் பணியாரே போற்றுதார்? இவர் கொண்ட பிராமணச் சூழ்ச்சித்தகர்ப்பு வேலைகளில் "தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு நிலைய" சார்பில் இப்புஸ்தக வெளியீடுமொன்றாகும். தமிழ் மக்கள் உணர்ச்சி ஆக்கத்திற்கு அந் நிலையம் ஸ்தாபனமாகியிருப்பதும் போற்றத்தக்கது. 'பிராமணரல்லாரிற் சிலர் தம்மைச் 'சூத்திரர்' என்று சொல்வது கூடாதென இப்புஸ்தகத்தில் கூறுகிறார். சூத்திரன் என்னும் பதத்திற்கு போரில் சிறை பிடிக்கப்பட்டவன், அன்போடு அடிமையானவன், வேசி மகன், விலைக்குக் கொள்ளப்பட்ட அடிமை, பரம்பரிய அடிமை, குற்றத்திற்காக அடிமை பூண்டவன் என ஏழு வகை இழிபொருள்களுண்டென்றும், நந்தமிழ்மக்கள் இவ்வர்த்தங்களுக் குரியரல்லரென்றும், நம்மை இழிவு படுத்த நம்தலைமேல் அப்பதத்தை வைத்த அப்பிராமணர்களே அவற்றிற்குப் பொருத்தமுடைத்தாரென்றும் பற்பல ஆதாரங்களுடன் காட்டி இச் சொல்லை துடைத்தெறிய ஒவ்வொரு தமிழரும் பிரயாசை யெடுத்து நம்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேணுமென்று வரைந்திருக்கின்றார். இதைத்தமிழ்மக்கள்வாசித்துணர்வார்களாகவும். பக்கங்கள் 32 கொண்டது. விலை அணா 2 தான். தேவையானவர், "தலைவர் தமிழ்ப் பல்கலைக் கழகப்பதிப்பு நிலையம், 98. கச்சேரி ரோடு, மைலாப்பூர், மதராஸ்" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும்.

---

### பாண்டிய குலப் பாலியரின் பரமானந்த பஜனை மஞ்சரி.

இப்பாடல் புஸ்தகம் பற்றி நம்மித்திரனில் விளம்பரமொன்று பிரசுரித்திருப்பது காண்க. இதன் ஆசிரியர் வடக்கன்குளம் ஸ்ரீமான் சி. கூ. சவரிமுத்துநாடாரவர்கள் எமக்கு நண்பரும் நம் மித்திரன் அபிமானியுமாவர். நம் மித்திரன் அதிபர் ஸ்ரீமான் ஞா. ஆ. முத்துநாடாரவர்களின் சென்ற வருட இலங்கை விஜய ஞாபகார்த்தமாய் இதை வெளியிட்டிருக்கிறார். இன்னவர் குலாபிமான மேலீட்டால் இப்புஸ்தகம் வெளியீடு செய்தது மிகவும் மெச்சத்தக்கது. இதில் நாடார் குலாபிமான வீரர்கள், குலப்பத்திரிகை, முன்னேற்றம், ஒற்றுமை, மதுபானக்கேடு, கதராடையின் மாட்சி, கலியுகக்காட்சி முதலியவை குறித்து பல வர்ண மெட்டுகளில் பாடல் களமைத்திருக்கிறார். நம் ஜாதீய பஜனைக் கேற்றதாகும். கிறிஸ்துநாதர் அருணோக்கிய பாடல்களும் உண்டு. ஆசிரியரும், நம்மித்திரன் அதிபரும், மற்றும் சகாக்களுமுள்ள போட்டோவின் ஆப்டோன் பிளாக்படம் ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கிறது. நாடார் குலத்தார் யாரும் படிக்கத்தக்கது. பக்கங்கள் 40 கொண்டது. விலை அணா 6. தேவையுள்ளவர் ஆசிரியருக்காவது அல்லது நம்மித்திரன் ஆபீசுக்காவது எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

---

தேனைப் பருக விரும்புகிறவன் குளவிகளின் கடிக்கு அஞ்சலாகாது. வெற்றியில் நோக்க முள்ளவன் இடையேயிருக்கும் தடைகளைப் பார்க்கக் கூடாது. வாழ்க்கையில் விருப்புள்ளவன் அதன் துன்பங்களை நோக்கக் கூடாது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection